திருவள்ளுவர் ஆண்டு 2045

நவம்பர் - 2014

# செந்தமிழ்

தொகுதி : 59
பகுதி : 01

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு




மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் செந்தமிழ்க் கல்லூரியில் 01.10.2014 அன்று பாட்டி தாத்தா மாணவர் குழு உலக முதியோர் தின சிறப்பு விழிப்புணர்வுக் கூட்டத்தில் முதியோரைப் பேணுதல் என்ற பொருளில் திரு. வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்கள் சொற்பொழிவாற்றினார். உடன் கல்லூரி முதல்வர் மற்றும் பாட்டி தாத்தா மாணவர் குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர். பா. நேருஜி.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 59
பகுதி : 01
நவம்பர் : 2014

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2045



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
| --- | --- | --- |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 6,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 10,000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

ஆசிரியர்
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| அயல்நாட்டினர் வளர்த்த அருந்தமிழ் | பா. வளன் அரசு | 6 |
| தொல்காப்பிய இலக்கணமும், பிற திராவிட வடமொழி இலக்கணக் கோட்பாடுகளும் | த. தினேஷ் | 13 |
| இலக்குவனார் காட்டும் பழந்தமிழர்கள் | முனைவர் பா. நேருஜி | 19 |
| திருக்குறள் பொன் போன்றது | ஆறுவிரல் ஐம்பொறி | 26 |
| ஆசாரக்கோவை, இலக்கிய இலக்கண நயங்கள் | பா. மோகன் | 28 |
| நூலகம் | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 34 |
| புறநானூற்றில் மறக்கொடை | ஜெ. ஜெனகம் | 35 |
| தமிழே! தாயே! வாழ்க நீடு! | புலவர். ந. ஞானசேகரன் | 39 |
| வழிபாட்டு நோக்கில் வைகுண்டரும் வள்ளலாரும் | முனைவர் இ. வீரசக்திவேல் | 41 |

# இதழ் மணம்

அன்புடையீர்,

வணக்கம். வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களால் தொடங்கப்பெற்ற நான்காம் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளியிடப்படும் 'செந்தமிழ் இதழ்' நூற்றாண்டுகளைக் கடந்து செம்மையான கருத்துக்களோடு உங்கள் கரங்களில் பூக்கிறது.

அன்னைத் தமிழை உலகத்தவர் அனைவரும் விரும்பிப் பயின்றதோடு தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும் பணியாற்றியுள்ளனர் என்ற கருத்துடன் முனைவர் பா வளன்அரசு கட்டுரை அமையப் பெற்றுள்ளது. போர்த்துக்கல் நாட்டிலிருந்து வந்த திருத்தொண்டர் ஆந்திரிக்கசு அடிகளார் தொடங்கி இத்தாலி, செருமனி, அயர்லாந்து, இங்கிலாந்து, பிராஞ்சு நாட்டு அறிஞர்கள் தமிழுக்காக பங்களிப்புச் செய்ததை 'அயல்நாட்டினர் வளர்த்த அருந்தமிழ்' என்ற தலைப்பில் தந்துள்ளார்.

தமிழின் தொன்மையான நூலான தொல்காப்பியத்தின் கால வரலாறு, தொல்காப்பியன் பெயர் குறித்த செய்திகள், தொல்காப்பிய இலக்கணத்தை பிற திராவிட வடமொழி இலக்கணக் கோட்பாடுகளோடு ஒப்பிட்டுள்ளார் முனைவர் பட்ட ஆய்வாளர் த. தினேஷ்.

மக்களை அடையாளப்படுத்துவது மொழி என்னும் கூற்றினை விளக்கி இலக்குவனார் இயற்றிய பழந்தமிழ் நூல் வழி நின்று பழந்தமிழர்கள் குறித்த முனைவர் பா. நேருஜியின் ஆய்வுச் சிந்தனைகள் போற்றுதலுக்குரியதாகும்.

ஆறுவிரல் ஐம்பொறி அவர்களின் திருக்குறள் குறித்த ஆய்வு நுண்மையானது. இலக்கியத்தின் நோக்கத்தினை தெளிவாக்கி நீதி நூல்களுள் ஒன்றான ஆசாரக்கோவையில் உள்ளடங்கியுள்ள இலக்கிய - இலக்கண நயங்களை சான்றுகளோடு பா. மோகன் வெளிப்படுத்தியிருப்பது சிறப்பாகும்.

நூலகம் குறித்த கவிவேந்தர் கா. வேழவேந்தனின் கவிதை சந்த நயத்தாலும், கருத்து வளத்தாலும் இனிக்கிறது. கொடைகளின் வகைகளை விளக்கி புறநானூற்றில் மறக்கொடை என்னும் தலைப்பிலமைந்த முனைவர்பட்ட ஆய்வாளர் ஜெ. ஜெனகம் அவர்களின் கட்டுரை கருத்தாழமிக்கது.

தமிழின் பெருமைகளை புதிய வார்த்தைகளில் புலவர். ந. ஞானசேகரன் புலப்படுத்தியிருக்கிறார். முனைவர் இ. வீரசக்திவேல் வழிபாட்டு நோக்கில் வைகுண்டரும் வள்ளலாரும் என்ற தலைப்பில் அவர்களது வழிபாட்டு முறைகளை அடையாளப்படுத்தியிருக்கிறார். தொடர்ந்து அடுத்த இதழிலும் இக்கட்டுரை வலம் வரும்.

- ஆசிரியர் -

# அயல்நாட்டினர் வளர்த்த அருந்தமிழ்

முனைவர்
**பா. வளன் அரசு,**
பாளையங்கோட்டை

## முன்னுரை

காலம் தோறும் ஞாலம் வியக்கத்தக்க வகையில் வளர்ந்து வருவது தமிழ் மொழி. பண்ணரசன் கண்ணதாசன் கூறுவது போன்று, "அவைப் புலவர் தாலாட்ட அரசகுலம் சீராட்டக் காலத்தின் புயல் கடந்து புகழோடு பொருந்தி வளர்வது தமிழ்"எனலாம். மூன்று சங்கங்கள் குமரி, கொற்கை, மதுரை ஆகிய இடங்களில் செயலாற்றி, நூற்றுத் தொள்ளாயிரத்து ஆறு வேந்தரால் ஒன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூறு ஆண்டுகள் மாண்புற மிளிர்ந்தது தமிழ். காய்சின வழுதி முதல் கடுங்கோன் வரை எண்பத்து ஒன்பதின்மரும் வெண்தேர்ச் செழியன் முதல் முடித்திருமாறன் வரை ஐம்பத்து ஒன்பதின்மரும் முடித்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரை நாற்பத்து ஒன்பதின்மரும் தமிழ்ச் சங்கம் வாயிலாகத் தொண்டாற்றிய செய்தி இறையனார் களவியலுரை புலனாகிறது. சமயம், பௌத்தம், சிவனியம், மாலியம், இசுலாம், கிறித்தவம் ஆகிய ஆறு வேறு சமயங்கள் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிபற்றிப் பேராசிரியர் அப்துல் கபூர் பாராட்டி மகிழ்ந்துள்ளார். அரசியல் கட்சிகளும் ஊடகங்களும் பல்வேறு நிலையில் தமிழ்வளர ஊழியம் புரிந்துள்ள பாங்கு கருதத்தக்கது. தமிழ் நாட்டுச் சான்றோர் தமிழ் வளர்ச்சிக்காகத் தொண்டாற்றியது போன்று அயல் நாட்டுச் சான்றோரும் தமிழ் வளர்ச்சிக்காக அயராது செயலாற்றி-யுள்ளனர். பேராசிரியர். கா. மீனாட்சி சுந்தரம் "ஐரோப்பியரின் தமிழ்க் கொடை" பற்றி ஆய்வேடு வழங்கியுள்ளார். தமிழ்த்தூதர் தனிநாயகம் அடிகளார் பல்வேறு நாடுகளில் தமிழ் ஆய்வு குறித்து விரிவாக விளம்பியுள்ளார். ஆசியவியல் நிறுவனத்தின் சார்பில் முனைவர் சாண் சாமுவேல் "அயல்நாட்டார் வளர்த்த அருந்தமிழ்" குறித்து வழங்கியுள்ள நூலில் முந்நூற்று ஐம்பதின்மர் பற்றிய தகவல் தரப்பட்டுள்ளது.

## ஐந்நூறு ஆண்டுகளில் தமிழ்த் தொண்டு

போர்த்துக்கீசிய வணிகரும் ஐரோப்பியக் கிறித்தவத் திருத்-தொண்டரும் தமிழகத்திற்கு வந்து ஆற்றியுள்ள தமிழ் வளர்ச்சிப் பணிகள் பாராட்டுதலுக்கு உரியவை. போர்த்துக்கல் நாட்டிலிருந்து வந்த திருத்தொண்டர் ஆந்திரிக்கசு அடிகளார் (1520-1600) புன்னைக்காயலில் தங்கி முறையாகத் தமிழ் பயின்றார். தமிழ்ப் பள்ளியை நிறுவினார். தமிழ்

இலக்கணம், அகராதி, உரைநடை ஆகிய முத்துறைகளில் முத்திரை பதித்த முன்னோடி ஆவார். இத்தாலியத் துறவி தத்துவபோதகர் (1577-1656), வண்டமிழ்த் தொண்டர் வீரமாமுனிவர் (1680-1747), செருமானியச் சான்றோன் சீகன்பால்கு (1683-1719), செருமானியத் தமிழ்ச் செம்மல் இரேனியசு (1790-1838) அயர்லாந்து அறிஞர் இராபர்ட்டு கால்டுவெல் (1814-1898), இங்கிலாந்து அறிஞர் சார்ச்சு யுக்ளோ போப்பு (1820-1908), பிரெஞ்சுப் பெரியார் தூபியர், பேராசிரியர் சூலியன் வின்சோன், பாப்ரீசியர், இராட்லர், வின்சுலோ ஆகியோர் குறிப்பிடத்தக்க சிறப்புமிக்க பெருந்தகையோர் ஆவர். அவர்தம் பணிகள் மொழிபெயர்ப்பு, இலக்கணம், அகராதி, பாநடை, உரைநடை, தொகுப்பு என்னும் ஆறு கூறுகளில் வீறுடன் விளங்கக் காணலாம்.

## மொழிபெயர்ப்பு

போர்த்துக்கீசியச் சேசுசபைத்துறவி ஆந்திரிக்கசு அடிகளார் புன்னைக்காயலைத் தன் பணித்தளமாகக் கொண்டு தமிழை முறையாகப் பயின்ற முதல் மேலைநாட்டு அறிஞர் எனலாம். அவரே ஒரு தமிழ்ப் பள்ளியைப் புன்னைக்காயலில் நிறுவி அயல்நாட்டாருக்குத் தமிழ் கற்பித்த முதல்வரும் ஆவர். தமிழில் அச்சான மூன்று நூல்களைப் போர்த்துக்கீசிய மொழியிலிருந்து தமிழாக்கித் தந்தவர் ஆந்திரிக்கசு அடிகளார். 1578ஆம் ஆண்டு கொல்லத்தில் அச்சான தம்பிரான் வணக்கம் பேச்சுத் தமிழ் நடையில் அமைந்துள்ளது. இறைவனையே தம்பிரான் என்று குறித்து எழுதியுள்ளார். இந்நூலில் விசுவாசமந்திரம், மோசே வாயிலாக வழங்கப்பட்ட பத்துக் கட்டளைகள், திருச்சபைக் கட்டளைகள் ஐந்து, இயேசு பெருமான் கற்பித்த இறைவேண்டல் ஆகியவை இடம் பெற்றுள்ளன. 1579ஆம் ஆண்டு கொச்சியில் அச்சான நூல் கிரிசித்தியானி வணக்கம், கிறித்தவ நெறி நவிலும் வாழ்வியல் ஏடாகிய இந்நூல் நூற்றுப் பன்னிரண்டு பக்க அளவில் அமைந்துள்ளது. குருசு என்று அழைக்கப்படும் சிலுவை அடையாளத்தை நெற்றியிலும் வாயிலும் நெஞ்சிலும் வரைவதுதான் எண்ணம், சொல், செயல் ஆகிய அனைத்திலும் இறைவன் காத்தருள்வான் என்பர். வினா விடை வடிவில் திருமறை விளக்கங்களைப் பன்னிரண்டு அதிகாரங்களாக விரித்துரைக்கிறது. 1586ஆம் ஆண்டு புன்னைக்காயலில் அச்சான அடியார் வரலாறு எழுநூறு பக்க அளவில் அமைந்துள்ளது. எண்பத்தாறு புனிதர் வரலாற்றைப் பேசும் இந்நூல், சான்றோர் திருவிழாக்களைப் பன்னிரு மாதங்களுக்கும் உரியதாக்கி-யுள்ளது. இந்த மூன்று நூல்களும் முறையே அமெரிக்கா, பாரீசு, வத்திரிக்கான் நூலகங்களில் இடம் பெற்றுள்ளன. ஆந்திரிக்கசு அடிகளார்

பங்குத் தலங்களில் பணியாற்றும் திருத்தொண்டர் அவையினையே 'கொம்பேரிசபை' எனக் குறித்தார். அவர்களுக்குரிய அவை ஒழுங்குகளைப் பதின்மூன்று இயல்களாக விரித்துக் கூறியுள்ளார். பரதவர் பயன்படுத்திய படகு வகைகள் குறிக்கப்பட்டுள்ளன. உரு என்பது நீளமுகக்கப்பல்; தோணி என்பது வட்டமுகக்கப்பல், கட்டுமரம், சம்பான், பரிசல், மரக்கலம், வள்ளம் போன்ற பல்வேறு படகுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

செருமானியத்தமிழ்ச் சான்றோன் பார்த்தலோமேயு சீகன்பால்கு தரங்கம்பாடியில் (1714-1719) ஆறு ஆண்டுகளில் விவிலியத் திருநூலைத் தமிழாக்கம் செய்து அச்சிட்டுத் தந்த முன்னோடி ஆவார். கடந்த முந்நூறு ஆண்டுகளில் விவிலியத் திருநூல் இருபத்தொருமுறை தமிழாக்கம் பெற்று, இப்போது 'திருவிவிலியம்' ஆகத் திகழ்கிறது. உலகில் இரண்டாயிரத்துப் பத்து மொழிகளில் விவிலியத் திருநூல் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

செருமானியர் தமிழ்ச் செம்மல் இரேனியசு (1790-1838) அறிவியல் தமிழை வழங்கிய பெருமைக்குரியவர் ஆவர். எழுநூற்று இருபத்தெட்டுப் பக்கங்கள் கொண்ட 'பூமி சாத்திரம்' உலக வரலாற்றுப் புவியியல் ஏடாக விளங்குகிறது. இத்தாலியத் தமிழ் ஏந்தல் வீரமாமுனிவர் 1730ஆம் ஆண்டு திருக்குறளை இலத்தீனில் வழங்கினார். அவரே செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், திறவுகோல், பரமார்த்தகுருவின் கதை ஆகியவற்றை இலத்தீனில் நல்கினார்.

இங்கிலாந்து நாட்டவரான எல்லீசர் (1776-1819) திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். பேராசிரியர் சார்ச்சு யுக்ளோ போப்பு, திருக்குறளையும் (1886) திருவாசகத்தையும் (1990) இரட்டைக் காப்பியங்கள் முதலியவற்றையும் ஆங்கிலத்தில் தந்தருளினார். கிண்டர்சுலி (1794), சுகாத்தியர் (1889) துரு-இலாசரசு (1895) ஆகியோரும் திருக்குறளை ஆங்கிலத்தில் வழங்கியுள்ளனர்.

உருசிய மொழி யில் கிருட்டினமூர்த்தியின் உதவியுடன் கிளாசோவு திருக்குறளை மொழி பெயர்த்துள்ளார். சிலப்பதிகாரத்தையும் உருசிய மொழியில் அவரே தந்துள்ளார். அமெரிக்கரான பீற்றர் பெருசிவல் ஆராயிரம் தமிழ்ப் பழமொழிகளைத் திரட்டித் தந்துள்ளார். சாமுவேல் பிசுக்கு கிரீன் உடற்கூறு மருத்துவ நூலைத் தமிழாக்கித் தந்த முதல்வராவார். அவரே மருத்துவக்கலைச் சொல் அகராதியும் வழங்கியவர் ஆவார். ஆங்கிலத் தமிழ் அறிஞரான ஆசர் பேராசிரியர் வி.சுப்பிரமணியம் உறுதுணையுடன் புதுமைப் பித்தன் கதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து நல்கியுள்ளார் (2014)

## இலக்கண ஆக்கம்

ஆந்திரிக்கசு அடிகளார் மூன்று ஆண்டுகள் பெரிதும் முயன்று பேச்சுத் தமிழ் இலக்கணத்தைப் போர்த்துக்கீசிய மொழியில் வழங்கியுள்ளார் (1553). அயல்நாட்டுச் சமயத் தொண்டர் அனைவரும் தமிழைக் கற்றுத் தமிழில் பேசவும் எழுதவும் அளவளாவவும் வற்புறுத்தியுள்ளார். வீரமாமுனிவர் முந்நூற்று எழுபது நூற்பாக்களில் ஐந்திலக்கண நூலாக எழுதிய தொன்னூல் விளக்கம் நூலாசிரியரின் உரை விளக்கத்துடன் அமைந்துள்ளது. செருமானியத் தமிழ்ச் சான்றோன் இரேனியசு தமிழ் இலக்கணத்தைச் செருமன் மொழியில் தந்துள்ளார் (1853). தமிழ்மொழி பற்றிய கையேட்டை இருபகுதிகளாக ஆங்கிலத்தில் வழங்கியவர் சார்ச்சு யுக்ளோ போப்பு (1904). திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (1856) பேராயர் இராபர்ட்டு கால்டுவெல் அவர்களால் வழங்கப்பட்டது. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அந்நூல் தமிழ் தனித்தியங்கும் இயல்புடையது என்பதை உலகுக்கு உணர்த்தியது.

## அகராதி அமைப்பு

ஆதம் தே பிரயோன்சா என்னும் பிரெஞ்சுத் தமிழ் அறிஞர் 1647ஆம் ஆண்டு "தமிழ் போர்த்துக்கீசிய அகராதி"யை உருவாக்கினார். இத்தாலியத் தமிழ் ஏந்தல் வீரமாமுனிவர் சதுரகராதி (1732), தமிழ் இலத்தீன் அகராதி (1742), போர்த்துக்கீசு-இலத்தீன் - தமிழ் அகராதி (1744), தமிழ் - பிரெஞ்சு அகராதி (1744) ஆகியவற்றை அருளிய பெருந்தகை ஆவார். அமெரிக்கரான வின்சுலோ ஆங்கிலம் - தமிழ் அகராதியை 1860ஆம் ஆண்டு வழங்கியுள்ளார். பிரான்சு நாட்டைச் சார்ந்த இராட்லர் 1836ஆம் ஆண்டு தமிழ்-ஆங்கில அகராதியை நான்கு பகுதிகளாக ஆயிரத்து நானூற்றுப் பதினேழு பக்கங்களாக அச்சிட்டுள்ளார். சோவியத்து நாட்டு இவெனின்கிராது பல்கலைக் கழகப் பேராசிரியர் செம்பியன் உரூதின் தமிழ்-உருசிய அகராதியை முப்பத்தெட்டாயிரம் சொற்களுக்கு விளக்கம் வழங்கும் வகையில் 1960ஆம் ஆண்டு நல்கியுள்ளார்.

## பாநடை எழுத்தோவியங்கள்

இத்தாலியத் தமிழ் ஏந்தல் வீரமாமுனிவர் தச்சுத் தொழிலாளியான யோசேப்பின் வாழ்வியலை முப்பத்தாறு படலங்களாகவும் மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து விருத்தப் பாக்களாகவும் "தேம்பாவணி" என்னும் விழுமிய காப்பியமாக 1726ஆம் ஆண்டு ஈந்துள்ளார்; அவரே மதுரைப் புலவர் பெருமக்களின் விருப்பத்திற்கு ஏற்ப 1729ஆம் ஆண்டு உரையும் எழுதி வழங்கியுள்ளார். "வண்ணம் தொண்ணூறு, மறைக்கதைகள்

நூற்றைந்து, தண்ணந் தமிழ்வலோன் தந்த நூலின் பயன்" என்று சான்றோர் போற்றிப் புகழ்ந்துள்ளனர். அன்னை மரியாளின் அருமை பெருமைகளையே "திருக்காவலூர்க் கலம்பகம்" என்னும் ஒரே பெண்பாற் கலம்பகமாக வீரமாமுனிவர் எழுதியுள்ளார். உலா என்னும் துறைக்கு மாறாக இக்கலம்பகத்தில் 'சமூக உல்லாசம்' என்னும் புதிய துறை இடம் பெற்றுள்ளது. "கருவில்லாக் கருத்தாங்கிக் கன்னி தாயாகியதால் உருவில்லான் உருவாகி உலகில் ஒரு மகவாக வந்தார்" என்று இயேசுவை ஈன்று புறந்தந்த மரியாளின் மாண்பினை எடுத்து மொழிந்துள்ளார். மணிமேகலைக் காப்பியத்தை நினைவூட்டும் வகையில் "கித்தேரியம்மாள் அம்மானை" என்னும் பனுவலை நாட்டுப்புறவியல் காப்பியமாக வீரமாமுனிவர் வழங்கியுள்ளார். தேவ அருள் வேதபுராணம் (1725) கொனசால்வசு வழங்கிய விவிலியக் காப்பியம் என்பர். சாண்பால்மர் 'கிறிஸ்தாயணம்' என்னும் காப்பியத்தை நான்கு காண்டங்களுடன் நல்கியுள்ளார் (1865). சுகாத்தியர் எழுதிய "சுவிசேடப்புராணம்" ஐந்து காண்டங்களுடன் அமைந்துள்ளது (1896). வீரமாமுனிவர் எழுதிய 'கருணாம்பரப் பதிகம்' இறந்தோரைக் கல்லறைக்கு எடுத்துச் செல்லும்போது நாஞ்சில் நாட்டவர் உருக்கமாகப் பாடும் பத்துப் பாக்கள் ஆகும். வண்ணக்கலைகள் என்னும் பெயரால் வீரமாமுனிவர் வழங்கிய எழுத்தோவியத்தில் முதல் நான்கு அடிகளில் இயேசுவும் அடுத்த நான்கு அடிகளில் மதலேனாள், செசீலி, பராபரை, கித்தேரியாள் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

## உரைநடை மறுமலர்ச்சி

தத்துவபோதகர் என்னும் இராபர்ட்டு தே நொபிலி 'ஞான உபதேசக் காண்டம்' முதலாய உரைநடை நூல்கள் பலவற்றைப் பதினேழாம் நூற்றாண்டுத் தமிழ் நடையாகிய மணிப்பிரவாளமாக எழுதினார். தைரியநாதர் என்னும் வீரமாமுனிவர் நற்றமிழ் நடையில் வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், பேதகமறுத்தல், உலுத்தேரினத் தியல்பு, வாமன் சரித்திரம், ஞானக்கண்ணாடி, ஞானவிளக்கம், திருச்சபைக் கணிதம் ஆகிய உரைநடை நூல்களை எழுதி உரைநடை மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார். திருக்கடையூர் நிருபம், பொதுநிருபம் ஆகிய இருமடல்கள் எழுதிக் கடித இலக்கிய வளர்ச்சிக்கும் வழிவகுத்தவர் வீரமாமுனிவர். அவர் பேச்சுத் தமிழ்நடைக்குச் சான்றாக எழுதிய பாரமார்த்த குருவின்' கதை எட்டுக் கதைகளின் தொகுப்பாகத் திகழ்கிறது. சேம்சு தே ரோசி என்னும் சின்ன சவேரியார் எழுதிய கிழமை அருளுரைகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. முனைவர் சாமிமுத்து

அவற்றைக் குறித்து ஆய்வேடு எழுதியுள்ளார். பேராயர் கால்டுவெல் தாமரைத் தடாகம், சிற்றறிஞர் குறிப்பிடம் ஆகிய உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். இருநூற்று நாற்பத்து மூன்று வினாக்களுக்கு விளக்கம் வழங்கும் சிற்றறிஞர் குறிப்பிடம் குழந்தை முதல் கிழவர் வரை அனைவரையும் சிந்திக்கத் தூண்டுகிறது.

## தொகுப்புப் பணிகள்

வீரமாமுனிவர் தாம் எழுதிய செந்தமிழ் இலக்கணத்தில் குறித்தவாறு "தமிழ்ச் செய்யுள் திரட்டு" என்னும் தொகை நூலை நல்கியுள்ளார். போப்பையரின் 'தமிழ்ச் செய்யுள் தொகை' வீரமாமுனிவரின் நூலையே முன்னோடியாகக் கொண்டுள்ளது. செருமானிய நாட்டு நூலகத்திற்கு (LUTKENS) நூற்று அறுபத்தைந்து நூல்கள் நல்கிய சீகன்பால்கு தமிழ்மொழியைச் செருமானியர் சிறப்பாகப் புரிந்து கொள்ளவும் தெரிந்து மகிழவும் வழிவகுத்துள்ளார். சுகாட்லாந்துத் திருத்தொண்டர் சாண் மருடாக்கு *"அச்சாகிய தமிழ் நூற்பட்டியல்" (1865) பற்றிய விவரத்தை நூல்* வடிவில் தந்துள்ளார்.

## நிறைவுரை

சாதியொழிப்பும் தமிழ் வளர்ச்சியும் இணைந்தே நடைபெற வேண்டும் என்று பாடிய பாவேந்தருக்கு மேல்வரிச் சட்டமாக மிளிர்ந்தவர் இரேனியசு எனலாம். தமிழ் இலக்கணத்தை எளிமைப்படுத்தி எழுதிய இரேனியசு அவர்கள் எழுத்தியல், சொல்லியல், சொற்றொடரியல் ஆகிய முப்பிரிவுகளை உருவாக்கினார். வேற்றுமைத் தொடர்களையும் வினைகளையும் நடைமுறைத் தமிழில் வழங்கிய இரேனியசு, சொற்றொடரியலைத் தமிழுக்குப் புதுக்கொடையாகத் தந்துள்ளார். பல்வேறு துறைகளில் நூல்கள் எழுதிய வீரமாமுனிவர், தமிழ் எழுத்து வரிவடிவச் சீர்திருத்தமும் செய்தவராவார். உயிரெழுத்துக்களான எகரம், ஒகரம் ஆகியவை புள்ளி பெற்றிருந்த நிலையை மாற்றி, எகர-ஏகார ஒகர-ஓகார வேறுபாடுகளையும் ஒற்றைக் கொம்பு இரட்டைக் கொம்பு வடிவ அமைப்பையும் வழக்காறு செய்தார். அச்சுப்பொறி பயன்பாட்டுக்கு வந்த தொடக்க நிலையில் அப்பணி எளிதாகவும் தெளிவாகவும் அமைந்துள்ளது. தேம்பாவணியில் கதைமாந்தர் பெயர்களைத் தமிழ் மணம் கமழும் வகையில் அதுனீசதன் (அந்தோனிசெதேக்கு), ஆணரன் (எபிரேய இளைஞன் யோசேப்பு), சகோபவன் (யாக்கோபு), சஞ்சோன் (சாம்சன்), தேவநேயன் (தூய ஆவி), சேதையோன் (கெதேயோன்) என்று எடுத்தியம்பியுள்ளார்.

ஊர்ப்பெயர்களை ஆச்சியம் (ஆசுதிரியா), இரவிமாபுரம் (எலியோபோலிசு), இலுசித்தானியம் (போர்த்துக்கல்) எருசலமண்டிலம் (செருசலேம்) கல்லியம் (பிரான்சு), வான்மலை (ஒரேபுமலை), சிப்புருத்தீவு (சைப்பிரசு) என்று எளிதாகவும் தெளிவாகவும் அனைவரும் முழங்கத் துணை புரிந்துள்ளார். வள்ளுவத்தை வையக நூலாக்கும் முயற்சி வீரமாமுனிவரில் தொடங்கியது (1730); போப்பையரால் தொடர்ந்தது (1886); யூசியால் தைவான் மொழியிலும் (2010) சீனமொழியிலும் (2014) தழைத்தோங்கியுள்ளது. நாற்பத்திரண்டு ஆண்டுகள் தமிழகத்திலும் இருபத்து மூன்று ஆண்டுகள் இங்கிலாந்திலும் பைந்தமிழ்ப் பணியாற்றிய போப்பையர், தமிழ் மக்களுக்குப் பயன்பட வாழக் கருதுவோர் தமிழில் நினைக்கப் பழகுவது மட்டுமன்றித் தமிழில் உணரவும் பயில வேண்டும் என்று தெளிவுறுத்தியுள்ளார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் மறுமலர்ச்சிக்கு ஊற்றிடமாக விளங்கிய இங்கிலாந்து இளைஞர் எல்லீசர், திருவள்ளுவருக்கு இரண்டு வராகன் எடையுள்ள தங்கக் காசுகளை வெளியிட்ட முதல்வர் ஆவார். சென்னைக் கல்விச்சங்கம் என்னும் கல்லூரி வாயிலாகத் தமிழ் முதலாய திராவிட மொழிகளுக்கு முதன்மை தந்து, மொழித் திறனுக்காக ஆயிரம்வராகன் பரிசளித்துப் பாராட்டியுள்ளார். யாழ்ப்பாணத்து மொழியில் அறிஞர் ஞானப்பிரகாசர் எழுபது மொழிகளைக் கற்றுத் தெளிந்து, செந்தமிழ்ச் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி தந்து, உலகின் உயர்தனிச் செம்மொழி தமிழே என்று பதினெட்டுச் சான்றுகளுடன் நிறுவியுள்ளார் (1944); அவருடைய பணியினையே மொழியியல் ஞாயிறு தேவநேயப் பாவாணர் தொடர்ந்து மேற்கொண்டு, தமிழின் தொன்மையினையும் தனித்தன்மையினையும் முதன்மையினையும் பல்வேறு நூல்கள் வாயிலாக உலகம் அறியச் செய்தார். பின்லாந்து நாட்டுப் பேரறிஞர் ஆசுகோ பார்போலா சிந்துவெளி நாகரிகம் பழந்தமிழ் நாகரிகம் என்று அகழ்வாய்வுகளாலும் கல்வெட்டுக்களாலும் உலகுக்கு அறிவித்துள்ளார் (1970). இலங்கையில் பிறந்து, மலேசியாவில் பணியாற்றி, உலகத்தமிழ்த் தூதராகத் துலங்கி, உலகத்தமிழ் மாநாடுகளை நடத்தி, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சென்னையில் நிறுவிய சாதனையாளராகப் புகழுடன் திகழ்பவர் சேவியர் தனிநாயகம் அடிகளார்; அவர் தமிழ் நாயகமாக ஒளியுடன் மிளிர்கிறார்.

*எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்*
*நல்லாள் உடையது அரண்.* குறள் : 746

# தொல்காப்பிய இலக்கணமும், பிற திராவிட வடமொழி இலக்கணக் கோட்பாடுகளும்

த. தினேஷ்,
முனைவர் பட்ட ஆய்வாளர்
அலிகார்

## முன்னுரை

ஆதியில் பல ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் மக்களிடையே கருத்துப் பரிமாற்றத்திற்கென உருவானது மொழி! மக்களின் எண்ணம், செயல்பாடு, சிந்தனை மாற மாற மொழியும் வளம்பெற்றது. தமிழ் இலக்கியம் தன்னகத்தே பழமைவாய்ந்த இலக்கியப் பெட்டகங்களைக் கொண்டது. தமிழ் இனம் வாழ்வுக்கே இலக்கணம் வகுத்த இனம். எனவே உலகில் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த ஒரே இனம் தமிழ் இனமாகத்தான் இருக்கவேண்டும். அத்தகைய தமிழ் இனத்தின் முதன்மை இலக்கண நூலாக விளங்குவது தொல்காப்பியம் ஆகும். அதனை பற்றியும் தொல்காப்பிய இலக்கணம் பற்றியும் பிறமொழி இலக்கணக் கோட்பாடுகள் பற்றியும் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

## தொல்காப்பியமும் அதன் காலமும்

தொல்காப்பியம் கி.பி.3-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நூல் என சிலர் கருதுகின்றனர். தொல்காப்பியம் என்ற பெயரே தொல்காப்பியன் என்ற ஆசிரியர் பெயராக மாறியது, எனவும் காப்பியக்குடியில் பிறந்தமையால் தொல்காப்பியன் என பெயர் பெற்றிருக்க வேண்டும் எனவும் அறிஞர்கள் கருதுகின்றனர். மேலும் மற்றொருசாரார் தொன்மையான இலக்கண கருத்துக்களை காப்பதால் தொல்காப்பியம் என நூலுக்குப் பெயர் வந்தது. மேலும், அதுவே நூலாசிரியர்க்கு பெயராயிற்று எனவும் கூறுவர்.

மேலும், மொழியியல் அறிஞர்கள் புத்தகம், அசோகர், அலெக்ஸாண்டர் காலத்தவர் தொல்காப்பியர் என்பர். அவ்வாறு புத்தர் காலத்தில் தொல்காப்பியர் காலத்தில் வாழ்ந்திருந்தர். இந்நூல் பௌத்த, சமண மதக் கருத்துக்கள் நிரம்ப இடம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் தொல்காப்பியத்தில் ஒரு சிறு குறிப்புகள் கூட மதத்தினையோ, கடவுளையோ பற்றி இல்லை. எனவே இவர் புத்தருக்கு முற்பட்டவர் என்பதை அறிய முடிகிறது.

மேலும், இதில் யவனர்கள் பற்றிய குறிப்பும் இல்லாததால் இவர் யவனர்களுக்கு முற்பட்டவர் என அறிய முடிகிறது. சங்க இலக்கிய நூல்கள் பெரும்பாலும் பத்து பத்து, நூறு நூறு பகுப்பு முறை பாடல்களைக் கொண்டது. ஆனால் தொல் 9/9 இயல்பு பகுப்புக்களைக் கொண்டது. எனவே இவை சங்க காலத்திற்கு முற்பட்டது. பின்னர் சங்க இலக்கியத்திலும் பின்னைய இலக்கியத்திலும் காணப்படாத இலக்கண விதிகளும், சொல் அமைப்புகளும் தொல்காப்பியத்தில் காணப்படுகிறது.

## வடமொழி இலக்கணம் சான்றுகள்

வால்மீகி தொல்காப்பியம் அரங்கேறிய இரண்டாம் சங்கத்து கபாடபுரம் பற்றி கூறுதலால் இராமாயண காலத்திற்கு முன்பே தொல்காப்பியம் தோன்றிவிட்டது. மேலும் இந்தியாவில் வேதத்திற்கு முன்பே தொல்காப்பியம் தோன்றிவிட்டது. இந்தியாவில் வேதத்திற்கு பிற்பட்ட வடநாட்டு நூல்களும் இதிகாச கதை நிகழ்வுகளும் காட்டப்படாமையால் தொல்காப்பியர் காலமும் வேதகாலமும் ஒன்றே ஆகும். எனவே தொல்காப்பியர் காலம் இன்றைக்கு 3500 ஆண்டுகட்கு முற்பட்டது என கொள்ளல் வேண்டும்.

## தொல்காப்பியமும், பிறதிராவிட மொழிகளும்

தொல்காப்பியம்கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. ஆனால் பிற திராவிட மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலியன கி.மு. 7-ஆம் நூற்றாண்டுக்கு பின்னரே தமிழில் இருந்து பிரிந்தது என மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றனர். தமிழ் மொழியில் இருந்து தெலுங்கு கி.மு.7-ஆம் நூற்றாண்டிலும், கன்னடமும் & மலையாளமும் கி.மு. 8-ஆம் நூற்றாண்டிலும்தான் பிரிந்தது. எனவே தமிழ் பிற திராவிட மொழிகளின் தாய் எனவும், தொல்காப்பியம் திராவிட மொழிகளின் முதல் இலக்கண நூல் எனவும் கூறப்படுகிறது.

எனவே தொல்காப்பியர் காலமானது தமிழகம், கேரளம், ஆந்திரம், கர்நாடகம் என 4 பெருநிலப்பரப்புகளாக ஒரே பகுதிகளாக இருந்திருக்க வேண்டும் என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

## இலக்கண கோட்பாடுகள்

தொல்காப்பியம் இலக்கண கொள்கையானது சிறப்பு வாய்ந்த ஒன்று. இவை இலக்கணம் + இலக்கியம் என்ற அமைப்பில் உள்ளது. அதாவது மரபியல், செய்யுளியல் இலக்கியத்திற்கான இலக்கணம் முதலான பகுப்பு முறைகளைக் கொண்டது. மேலும் பிற மொழிகளில் இல்லா இலக்கண

பகுப்பாகத் தொல்காப்பிய வேற்றுமை உருபுகளின் அடிப்படையிலேயே வேற்றுமையைப் பிரித்துள்ளார். இம்முறை பிறதிராவிட மொழிகளில் காணப்படவில்லை.

## இலக்கண நூலின் இயல்புகள்

ஒரு இலக்கண நூலானது அந்நூல் வழங்கப்பெறும் மக்கள் அம்மக்களது வரலாறு அவர்களது எல்லை மற்றும் பாரம்பரியம் முதலானவற்றைக் குறிப்பிட வேண்டும். தொல்காப்பியமும் தான் வழங்கபெறும் நிலத்தினை "வடவேங்கட முதல் தென்குமரி முதல் ஆயிடை தமிழ் கூறுநல்லுலகம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய தொல்காப்பியத்தை தழுவி எழுந்த கி.பி.1200-ஆம் நூற்றாண்டில் கன்னட மொழியில் தோன்றிய 'சப்தமொழிதர்பனம்' எனும் இலக்கண நூலும் இவ்வகை எல்லைகளைக் குறிப்பிடுகின்றன. அதுமட்டுமல்லாது தண்டியின் காவ்யதர்சன் எனும் நூலினைத் தழுவி எழுந்த மற்றொரு கன்னட இலக்கண நூலான 'கவிராஜ மார்க்கம்' எனும் மொழிபெயர்ப்பு நூலும் எல்லையாக கோதாவரியைக் குறிப்பிட்டுள்ளது.

## தொல்காப்பியமும் கன்னட இலக்கணக் கோட்பாடுகளும்

கன்னட மொழியின் முதல் இலக்கணநூல் 'சத்ய பிரகடனா' என்பதாகும். தமிழில் வினைச்சொற்களுக்கு 8,000 வடிவங்களுக்கு மேல் உள்ளதைப் போல் கன்னடத்தில் 450-க்கு மேற்பட்ட வினைச்சொல் வடிவங்கள் உள்ளன.

தமிழிலக்கணம் மூன்றிலக்கணம், ஐந்திலக்கணம் என 2 வடிவங்கள் உள்ளதைப் போல், கன்னடத்தில் மகேஸ்வர இலக்கணம், ஐந்திரம் இலக்கணம் என இருவகை இலக்கண மரபுகளைக் கொண்டதாகும். எனகலகன்னடா எனும் பழைய இலக்கண நூல் கூறுகின்றது. அதுமட்டுமல்லாது பிறப்பியல் பற்றி "சப்தமொழிதர்பனா" எனும் இலக்கண நூல் மட்டுமே குறிப்பிடுகின்றது என ஸ்ரீ கிருஷ்ணபட் என்பவர் குறிப்பிடுகிறார்.

மேலும், தமிழ் இலக்கியத்தில் கூறப்படும் புறம், களவு, கற்பு முதலியவை கன்னடத்தில் காணப்படவில்லை. இதுபோன்ற திராவிட மொழிகளில் ஈறுகள் அடிப்படையில் புணர்ச்சியை விளக்கிச் சொல்வதை தொல்காப்பியத்தைப் போலவே சப்தசிந்தாமணி எனும் தெலுங்கு நூலில் காணப்படுகிறது.

## தொல்காப்பியமும் வடமொழி இலக்கணக் கோட்பாடுகளும்

தமிழினைப் போலவே வடமொழியும் பற்பல இலக்கண விதிகளைக் கொண்டது. இவ்விலக்கண விதிகள் மொழியினைச் செவ்வனே சிறப்பாகப் பேசுவதற்கு உதவுகிறது. வடமொழியில் சிறந்த இலக்கணப் புலவர்களாக பாணினி மற்றும் பத்ரகிரியார் போன்றோரைக் குறிப்பிடுவர்.

- ❀ பாணினி ஒரு மிகப்பெரிய பகுப்பாய்வுக்காரர். ஒரு சொல்லுக்கு இலக்கணம் வகுப்பதில் வல்லவர்.
- ❀ மேலும் பத்திரகிரியார் சொல்லுக்கு தனி வாழ்வு இல்லை. தொடருக்கு மட்டுமே உள்ளது. சொல்லுக்கு அடிப்படைத் தொடரே என்கிறார்.
- ❀ தெலுங்கு மொழியின் முதல் இலக்கண நூலான பாலவியாகம், மலையாளத்தில் 18-ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'லீலாவதி' கன்னடத்தில் தோன்றிய 'சப்தமனிதர்பனா' முதலானவை வடமொழி இலக்கண நூல்களைத் தழுவி எழுந்தவையே ஆகும்.
- ❀ வடமொழியில் பாணினிக்கு முன்பே ஒலியியல் வந்துவிட்டது. சமஸ்கிருதத்தில் ஒலியியலை சிக்கை பிராதிசாக்கியம் என்பர்.
- ❀ நால்வகை வேதங்களும் ஒலியியலை சார்ந்ததே என்பர் மொழியியல் அறிஞர்கள்.

## நால்வகை வேதங்களின் அமைப்பு முறை

| | |
|---|---|
| **ரிக்வேதம்** | இது மிகப் பழமைவாய்ந்த வேதம். இவை சுலோகம் வடிவில் அதாவது தொடர்முறைபோல் சந்திபிரிக்காமல் அமையப்பெற்று இருக்கும். |
| **யசுர்வேதம்** | இவை சந்தி பிரித்து அதனைப் போலவே அமைக்கப் பெற்றிருக்கும். |
| ***சாமவேதம்*** | இவை அதே சுலோகத்தை இசையுடன் கலந்து உச்சரிப்பது போல் இருக்கும். |
| **அதர்வண வேதம்** | இவற்றில் பிற்கால சூத்திரங்கள் இணைத்துக் கூறப்பட்டு இருக்கும். |

எனவே, வேதங்கள் ஒரு ஒலிநூல் ஆகும். வேதம் என்பது ஒன்றுதான் அவை நால்வகை அல்ல என மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றனர். பின்னர் எழுந்த வடமொழி இலக்கண நூல்களில் ஒலியியல் பற்றிய செய்திகள் அவ்வளவாக இடம்பெறவில்லை. எனவே தொல்காப்பியம் வேதகாலத்திற்கு முற்பட்டது என நம்மால் அறிய முடிகிறது.

## நூல் பகுப்பு முறைகள்

சங்க இலக்கியத்தின் நூல்கள் பெரும்பாலும் பத்து பத்து பகுப்பு முறைகளில் பாடல்களைக் கொண்டது. மேலும் ஒருசில தமிழ், கன்னடம், பிராகிருதம் ஆகிய மொழி நூல்களில் 9-ஆக பிரிக்கும் பழக்கம் காணப்பட்டது. அவற்றில் ஒன்று தொல்காப்பியம் எனவும் அதுமட்டுமல்லாது வடமொழிகளில் 8 இயல்களாகப் பிரிக்கும் வழக்கம் இருந்தது. இதற்கு அசுட்டாத்யாயம் எனப்பெயர். இதனால் வடமொழி இயலில் இருந்து தொல்காப்பியர் தன் இலக்கண நூலான தொல்காப்பியத்தை வேறுபடுத்திக்காட்ட 8+1 என 9 இயல்களாக வைத்தார் என கூறப்படுகிறது.

பாலினத்தை பகுப்பதில் தொல்காப்பியத்திற்கும், வடமொழி இலக்கணத்திற்கும் வேறுபாடு உள்ளது. சமஸ்கிருதத்தில் பாலினத்தை ஆண்பால், பெண்பால், அலிபால் என மூன்றாகவும், தொல்காப்பியத்தில் ஆண்பால், பெண்பால் என 2-ஆகவும் கூறப்பட்டுள்ளது.

சமஸ்கிருத மொழியை அடிப்படையாகக் கொண்டே பிராகிருதமொழி தோன்றியது. அவற்றில் 'பிராகிருத பிரகாசி' என்பது சிறப்பு வாய்ந்த இலக்கண நூல்களில் ஒன்றாகும். மேலும் 'மராட்டிய பிராசிருதம்' எனும் இலக்கண நூலில் திராவிட மொழி பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அதில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி, குஜராத்தி முதலிய திராவிட மொழிகள் பஞ்ச திராவிட மொழிகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வாறு இருமொழிகளில் பற்பல இலக்கணக் கோட்பாடுகள் அமையப் பெற்றுள்ளதால், திராவிட மொழிகளில் சமஸ்கிருதத்தை சேர்க்கக் கூடாது என 'அரிசமாசம்' எனும் நூல் குறிப்பிடுகிறது.

## அறிவியல் நூல்களின் முன்னோடி தொல்காப்பியம்

இன்றைய அறிவியல்யுகம் பற்பல நவீன கருவிகளை உடையது. பற்பல வசதிகளைக் கொண்டது. ஆனால் இவ்வசதிகள் எதுவும் இல்லாத சுமார் 3500 ஆண்டுகட்கு முன்னரே அறிவியல் பற்றிய செய்திகளும் வானவியல் பற்றிய செய்திகளும் இடம்பெற்றுள்ளன. ஆம், நம் தொல்காப்பியம் உயிரினங்கள் பற்றிய கோட்பாடுகளை கூறியுள்ளது. உயிரினங்களின் தோற்றம், மேலும் அவற்றுக்கு உண்டான அறிவு நிலை, விலங்கினத்தை அறிவியல் ரீதியாகவும் பிரித்துள்ளார்.

மேலும், பருவநிலைகள் மாதங்கள் கோள்கள் நாள்மீள்கள் நொடி, அளவை முறைகள் போன்றவற்றை துல்லியமாக கூறியுள்ளார். இவை

போல பற்பல துறைகள் தாவரம், மருத்துவம், பௌதீகம் முதலான கருத்துக்கள் இடம் பெற்றுள்ளதால் இது உலகின் முதல் அறிவியல் நூல் எனவும் கூறப்படுகிறது.

## தொல்காப்பியத்தின் சிறப்புகள்

தொல்காப்பியம் பண்டைய தமிழர்களின் தொழில் பண்பு நலன்கள் நாகரீகம், சமூகநிலை, கடவுள் கொள்கை முதலானவற்றை கூறுவதால் இது சமூக, பொருளாதார, பண்பாட்டு, வரலாற்று நூலாக விளங்குகிறது. தமிழ்நாட்டு எல்லை, நிலப்பாகுபாடு, மூவேந்தர்கள், போர்முறை ஆட்சிமுறை முதலியவற்றை குறிப்பிடுவதால் இவை "அரசியல் வரலாற்று நூலாகத்" திகழ்கிறது. மேலும் தற்கால இலக்கண இலக்கியக் கருத்துகளை வகுத்து உரைப்பதோடு இவை இலக்கிய இலக்கண வரலாற்று நூலாக திகழ்கிறது.

உலகில் பிறமொழி இலக்கணம் எதுவும் பொருளாராய்ச்சியை மேற்கொண்டதில்லை. மொழி இலக்கணத்திற்கு நிகராக பொருளிலக்கணம் கூறும் உலகின் ஒரே இலக்கண நூல் தொல்காப்பியம் மட்டுமே ஆகும். தொல்காப்பியத்தின் உரியியல் பிற்கால நிகண்டுகள் தோன்ற மூலமாக இருந்தன. எனவே இவற்றை 'அகராதியின் முன்னோடி' எனவும் அழைக்கலாம். உரையாசிரியர்களுக்கு முன்பே செய்யுளுக்கு உரை மற்றும் விளக்கம் அளிக்கும் முறை தொல்காப்பியத்தில் காணப்படுகின்றது.

அதுமட்டுமல்லாது பெறற்கரிய இலக்கண நூலுக்குச் சிறப்பு செய்யும் விதமாக "தொல்காப்பிய அறக்கட்டளை" எனும் ஓர் அமைப்பினை ஏற்படுத்தியுள்ளது அண்ணா பல்கலைக்கழகம். இவை மட்டுமல்லாது 'உலகத்தமிழ் செம்மொழி தொல்காப்பிய பேரவை' எனும் அமைப்பு கலைஞரால் தொடங்கப்பெற்றது இவ்வமைப்பு பற்பல ஆய்வுகளையும் இலக்கணத்தையும் பற்றிக் கட்டுரைகள் வெளியிடுகிறது.

## முடிவுரை

இவ்வாறு தொல்காப்பியம் மேற்குறிப்பிட்ட அனைத்து சிறப்பம்சங்களையும் தன்னகத்தே கொண்டும், வடமொழியில் இருந்து தன்னை வேறுபடுத்திக்காட்டி இலக்கண நூல்களின் முன்னோடியாக திகழ்கிறது. எனவே உயர்நிலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இவ்விலக்கணம் ஓர் வழிகாட்டி நூலாக அமையும் என்பதை நம்மால் அறிய முடிகிறது. நமக்கு கிடைத்த இப்பெட்டகத்தை நாம் ஒவ்வொருவரும் போற்றுவது நமது கடமையாகும்.

# இலக்குவனார் காட்டும் பழந்தமிழர்கள்

முனைவர் பா. நேருஜி
உதவிப் பேராசியர்
செந்தமிழ் கல்லூரி

மக்களை அடையாளப்படுத்துவதில் மொழியே சிறப்பிடம் பெற்றுவருகின்றது. பொதுவாக மொழியால் மக்களினம் பெயர் பெற்றதா? அல்லது மக்களினத்தால் மொழி பெயர் பெற்றதா? எனில் தமிழர்களைப் பொறுத்தவரை மொழியால்தான் மக்களினம் பெயர் பெற்றுள்ளனர். 'தமிழ்' என்பதற்குத் 'தமிழர்' என்ற பொருள் உண்டு. எனவே பழந்தமிழ் பற்றி அறிந்தவர்கள் பழந்தமிழர் பற்றியும் அறிதல் இன்றியமையாதது. தமிழின் உயர்வையும் தமிழர் உயர்வையும் பிரித்தறிய முடியாது. மக்கள் உயர்ந்தால் மொழியும், மொழி உயர்ந்தால் மக்களும் உயர்வர். இதனை அடியொற்றி மக்களையும் மொழியையும் பிரித்தறிய முடியாத நிலை உள்ளது. இவ்ஆய்வுக் கட்டுரை இலக்குவனாரின் 'பழந்தமிழ்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ள பழந்தமிழும் தமிழரும் என்னும் கட்டுரை வெளிப்படுத்தியுள்ள பழந்தமிழர்களின் நிலை பற்றி விளக்கியுரைப்பதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## செல்வத்தின் பயன்

பழந்தமிழர்கள் தம்மை அடைந்தோர் துன்பங்கண்டு வருந்தி இரக்கம் கொண்டுள்ளனர். துன்புறுவோர்க்கு ஏதும் நிகழ்ந்து விடுமோ என்று அஞ்சியுள்ளனர். இப்பண்பாடுடையோரே சிறந்த செல்வம் உடையவராவர். சான்றோர் இச்செல்வத்தையே 'செல்வம்' என மதித்துள்ளனர். எனவே, செல்வத்தை வெறுக்காது சுற்றத்தாரை என்றும் மகிழ்விக்கவும், நல்லிசையை வளர்க்கவும் அறம், பொருள், இன்பம் அடையவும் பொருள் வேண்டும் எனக் கருதி உழைத்துள்ளனர். இதனை,

இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுநர் இருந்தோர்க்கு அரும்புணர்வு இல் ப.198

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. இதனால் செல்வத்தின் தேவை உணர்ந்து பொருளீட்டிப் புகழ்பட வாழ்ந்துள்ளனர் என்பதனை அறியமுடிகின்றது.

## காதல்

தனக்குரிய வாழ்க்கைத் துணைவியைக் காதலித்து உரிய காலத்தில் மணந்துள்ளனர். காதல் மணத்திற்குத் தடையாக அக்காலத்தில் ஏதும் இருக்கவில்லை. எனவே, முன்பின் உறவின்றியே அன்புடை நெஞ்சத்தால்

யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந் தனவே ப.198

என்ற பாடல் வழி அறிய முடிகின்றது. இவ்வாறு மணக்கப்பட்ட தலைவியும் தலைவன் மீது உளமார்ந்த விருப்பமுடையவளாய் இருந்திருக்கிறாள். அவள் இப்பிறவியில் மட்டுமின்றி மறுபிறப்பிலும் தனக்கு அவனே கணவனாக அமைய வேண்டும் என விரும்புகிறாள். இதனை,

இம்மை மாறி மறுமை யாயினும்
நீயாகியர் என் கணவனை
யானாகியர் நின்நெஞ்சு நேர்பவளே ப.199

என்ற பாடல் வரிகளால் அறியமுடிகின்றது.

## திருமண முறை

பழந்தமிழ்ப் பெண்களுக்கு அனைத்து உரிமைகளுடன் தான் விரும்பியவனை மணக்கும் உரிமையும் காணப்பட்டுள்ளது. சமுதாயத்தில் திருமணச் சடங்குகள் நிகழ்வதற்கு முன்னர் 'சிலம்பு கழி' நோன்பு என்ற ஒரு சடங்கு நிகழ்ந்துள்ளது. அது மணமகன் அல்லது மணமகள் வீட்டில் நடைபெற்றுள்ளது. இச்சடங்கில் புரோகிதர்களோ, பொருள் விளங்காத மந்திரங்களோ இடம் பெறவில்லை. பதிலாகத் தாலியோடு விளங்கும் திருமணச் சடங்குகளைக் குழந்தை பெற்ற பெண்கள் நடத்தி வைத்துள்ளனர். இதனை,

புதல்வற் பயந்த திதலை அவ்வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடி ப.200

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. தாலியோடு விளங்கும் பெண்கள்தாம் (கட்டுக் கழுத்திகள்) திருமணம் முதலிய நற்சடங்குகளில் பங்குகொள்ள வேண்டும். இப்பழக்கம் இன்று வரை நடைமுறையில் இருந்து வருகின்றது.

## குழந்தைச் செல்வம்

திருமணத்தின் பெரும் பயன்களுள் ஒன்று மக்களைப் பெறுதல். இம்மக்களே நாட்டின் செல்வம் எனக் கருதப்பட்டது. எனவே, மக்கள் இல்லாத வாழ்வை மாண்பற்ற வாழ்வாக எண்ணியிருந்தனர். இதனை,

மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம் வாழு நாளே ப.203

என்னும் பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன. மேலும், குழந்தையைப் பெற்று வளர்த்தல் தாயின் உயரிய பொறுப்பாக இருந்துள்ளது. இதனை அக்காலப் பெண்கள் நன்கு உணர்ந்திருந்தனர். மகனைச் சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடமையாகும். இதன் மூலம் குழந்தையைப் பெறுதல் நாட்டின் தொண்டுகளுள் ஒன்றாகக் கருதப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது. இதனை,

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே ப.203

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

## காளைக்குக் கடன்

குழந்தைப் பருவம் கடந்து காளைப் பருவம் கிட்டுகின்றது. சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடன் என்பதிலுள்ள சான்றோன் என்பதற்குப் பல நற்குணங்களாலும் நிறைந்தோன் என்னும் பொருளோடு வீரன் என்னும் பொருளும் சுட்டப்பட்டுள்ளது. அக்காலத்தில் ஆடவர் அனைவரும் நாட்டுக்காவல் பொருட்டு நற்போர் புரிபவர்களாக இருந்துள்ளனர். அவர்கள் போர்ப்பயிற்சி பெற்றதுடன் போர் எனில் புத்துணர்ச்சியும் பெற்றுள்ளனர். எனவே, 'போர் எனில் புகழும் புனை கழல் மறவர்' எனப் பாராட்டப்பட்டுள்ளனர்.

## அன்னையர் இயல்பு

பழந்தமிழ் அன்னையர்கள் நாட்டு நலன் கருதி தம் மக்கள் போருக்குச் செல்வத்திற்குரிய முறையில் வளர்த்துள்ளனர். அவர்கள் போருக்குச் செல்வதைப் பெருமையாகக் கருதினர். ஒரு தாய் தன் மகன் எங்கிருந்தாலும் உரிய நேரத்தில் போர்க்களத்தில் தோன்றுவான் என்பதில் எனக்கு ஐயமில்லை என்று கூறியுள்ளார். மேலும், அவனைப் பெற்றெடுத்த இவ்வயிறு புலிபடுத்துச் சென்றுவிட்ட முழை (குகை) போன்றது என்று பெருமிதத்துடன் கூறுகின்றாள். இதனை,

புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே ப.205

என்ற பாடலடிகள் வெளிப்படுத்தியுள்ளன. இத்தகைய அன்னையர் வாழ்ந்த காலம் பழந்தமிழகமாகும்.

## மன்னனின் இயல்பு

சோழன் நலங்கிள்ளி என்ற அரசன் முழங்கிய வீரவுரையில், தன்னிடம் ஈ என இரந்தால் அரச பதவியையும் பெறலாம். உயிரையும் கொடுப்பேன். அதுவன்றி இந்நாட்டு வீரமிக்க மக்களின் வீர ஆற்றலை மதியாது படையெடுத்துவரின் அவன் அறியாதவனே. அவன் நிலை உறங்கு புலியின் மீது இடறி விழுந்த குருடன் நிலை, யானையின் காலில் அகப்பட்ட மூங்கில் முளை நசுக்கப்படுவது போல என்ற உவமைகள் இடம்பெற்றுள்ளன. அவ்வாறு செய்யவில்லையெனில் பரத்தையரைக் கூடியவன் என்ற இழிநிலையை அடைந்தவனாவேன் என்கிறான்.

நம் நாட்டு அரசர்களைப் பற்றி வெளிநாட்டினர் 'அந்தப்புரத்தில் ஆரணங்களுடன் கூடிக் குலவுவதே அரசர்களின் பொழுதுபோக்கு' என்று எழுதினர். ஆனால் பழந்தமிழ்நாட்டு அரசர்கள் பல மகளிருடன் கூடுவது இழிவு என்று கருதியதனை அவர்கள் அறியார்கள். இதன் மூலம் அரசன் தன் மனைவியிடம் கொண்டிருந்த உண்மைக் காதல் புலப்படுகின்றது.

தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல் இரும் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைக என் தாரே — பு.206

என்ற பாடலடிகளால் அறியமுடிகின்றது.

## புலவர்கள் அறிவுரை

தமிழ்ப் புலவர்கள் நாட்டின் சிறப்புக்கு வழிகாட்டியுள்ளனர். பிசிராந்தையார், தான் நரையின்றி வாழ்வதற்குக் காரணங்களாக மனைத்தக்க மாட்சியுடைய மனைவி, நல்லியல்புகள் நிரம்பப் பெற்ற மக்கள், வீட்டில் குறிப்பறிந்து ஒழுகும் அறிவு படைத்த பணியாளர்கள், மக்கட்குத் தொல்லைதராது நல்லாட்சி புரியும் வேந்தன் மற்றும் இவைகட்கு மேலாக நற்குணம் மிகுந்த கற்றுணர்ந்து அடங்கிய சான்றோர்கள் நிறைந்திருக்கிறார்கள். இப்படி இருந்தால் எத்துணை ஆண்டுகள் வாழ்ந்தாலும் நரையின்றி வாழலாம் என்கிறார்.

அரசன் எவ்வாறு வரி பெறவேண்டும் என்பதனைப் பிசிராந்தையார், யானைக்கு வயலில் விளைந்த நெல்லை சேர்த்து வைத்து அளவு முறையால் உணவாக இட்டால், ஒரு மா அளவு இல்லாத நிலத்தில் விளைந்தனவும் பல நாட்களுக்காகும். அவ்வாறின்றி யானையை அவிழ்த்து விட்டுத் தானே உண்ணுமாறு செய்துவிடின் நூறு வயல்களாய் இருப்பினும் சில நாட்களுக்குக்கூடப் போதுமானதாய் இருக்காது.

உண்ணுவதிலும் அழிவது மிகுதியாய் இருக்கும். அதுபோன்று அரசனும் விதிக்கும் வரியை ஒழுங்குபடுத்தித் தவணைகளாகப் பெற முயன்றால் மக்களும் கொடுப்பர். வரித் தொகையும் மிகும் என்கிறார். இதன் வாயிலாகப் பழந்தமிழ்ப் புலவர்கள் அரசனுக்கு அறிவுரை கூறும் நிலையில் சிறப்புப் பெற்றிருந்தனர் என்பதை அறியமுடிகின்றது.

## உலகப் பொதுமை

கணியன் பூங்குன்றனாரின் மெய்யுரை என்றும் பொருந்துவதாய் உள்ளது. அக்காலத்தில் 'எல்லா ஊர்களும் எனது ஊர் போன்றனவே. எங்குள்ளவர்களும் என் உறவினர்களே என்று கூறுவது என்பது எவராலும் நினைக்க முடியாத ஒன்றாக உள்ளது. மொழி, மதம், எல்லை, நிறம், கொள்கை யாவும் கடந்த ஒரு நிலையே உலகப் பொதுமை ஆகும். இவ்வுயர்ந்த கொள்கைக்கு வித்திட்டவர் பழந்தமிழ்ப் புலவர் என்பது சிறப்புடையது.

## ஒற்றுமை

புலவர்கள் பல்வேறு ஊர்களில் தோன்றியிருப்பினும் ஒருங்கு கூடி உறைந்தனர். ஒருவரை ஒருவர் கொள்கையால் தழுவிக் கொண்டனர். அரசனால் போற்றப்பட்டு அரசவைகளில் தம் புலமையை வெளிப்படுத்துங்கால் போட்டி இருந்தது. ஆனால் பொறாமை இருந்ததில்லை. பிறரை அறியாதவரென்று கூறினர் இலர். பிறர் புலமையையும் மதித்து நடந்தனர். பிசிராந்தையார் எனும் பெரும் புலவர் உயிர்துறக்க வடக்கிருந்த பொழுது அனைத்துப் புலவர்களும் அங்கு கூடிவிட்டனர். அதனைக் கண்ட கண்ணகனார் எனும் புலவர் 'சான்றோர் இயல்பு கூடி வாழ்தலே, பிரிந்து வாழ்தலன்று' என்று மொழிந்துள்ளார்.

## அணிகலன்கள்

பழந்தமிழர்கள் பொன்னும் மணியும் முத்தும் பொருந்திய நகைகளை நன்முறையில் செய்து அணிந்து மகிழ்ந்துள்ளனர். தமிழர்கள் முதலில் கண்டு பயன்படுத்தியது பொன்னேயாகும். அதனால்தான் பொன் அடிப்படையிலேயே பிறவற்றிற்கும் இரும்பொன் (இரும்பு), செம்பொன் (செம்பு), வெண்பொன் (வெள்ளி) என்று பெயரிட்டுள்ளனர்.

## நகர் - நகரம்

பழந்தமிழர்கள் பெரிய வீடுகள்கட்டி அதில் வாழ்ந்துள்ளனர். பெரிய வீடு நகர் என அந்நாளில் அழைக்கப்பட்டது. பெரிய வீட்டைக்குறித்த நகர் என்ற சொல், பின்னர் பெரிய வீடுகள் நிறைந்த பேரூரைக் குறிக்கப்

பயன்பட்டது. அப்பொழுது 'அம்' என்னும் ஆக்க விகுதி சேர்ந்து 'நகரம்' ஆனது. இந்நகர் என்ற சொல் இன்று இந்திய மொழிகளில் எல்லாம் இடம் பெற்றுள்ளது. நகரவாழ்வு நாகரீக வாழ்வாக மதிக்கப்பட்டு நாகரீகம் என்ற சொல் தோன்றியுள்ளது. பழந்தமிழர்கள் நகர நாகரீக வாழ்வு வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவு.

## காலம் பற்றிய அறிவு

பழந்தமிழர்கள் காலத்தைச் சிறுபொழுது என்றும் பெரும் பொழுது என்றும் பகுத்துள்ளனர். ஒரு நாளை ஆறு பகுதிகளாகவும் ஓர் ஆண்டை ஆறு பருவங்களாகவும் பகுத்துள்ளனர். ஏழு நாட்களும் பன்னிரண்டு மாதங்களும் தமிழ்ச் சொற்களேயாகும். உலகத்தை 'ஞாலம்' என்ற சொல்லால் அழைத்துள்ளனர். மாதம் என்ற சொல் மதி என்பதிலிருந்து தோன்றியது. ஞாலம் என்றால் 'தொங்குவது' என்று பொருள். உலகம் வானவெளியில் பற்றின்றித் தொங்கிக் கொண்டிருக்கின்றது என்பதனை அறிந்துள்ளனர். இது வடவர் கூட்டுறவு ஏற்படுவதற்கு முன்பே கொண்டவைகளாகும். அவற்றுள் சில வட சொற்கள் என்று கூறுவது ஏற்புடையதன்று. இதன் மூலம் பழந்தமிழர்கள் நாளும் கோளும் பற்றி அறிந்தவர்களாகவும் வான நூல் ஆராய்ச்சியில் வல்லுநர்களாகவும் விளங்கியுள்ளனர் என்பதனை அறியமுடிகின்றது.

## முத்தமிழ் அறிவு

பழந்தமிழர் ஆடலும் பாடலும் விழாவும் விருந்தும் கொண்டு இன்பவாழ்வு நடத்தியுள்ளனர். வாழ்வே இன்பத்திற்குரியது என்று எண்ணியதுடன் துன்பத்திலும் இன்பம் காண விழைந்துள்ளனர். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்த் துறைகளிலும் சிறந்து விளங்கியுள்ளனர். இசைக்கருவியை நரம்பு என்றே அழைத்துள்ளனர். தொல்காப்பியரும் இசை பற்றிய இலக்கண நூலை 'நரம்பின் மறை' என்றே குறிப்பிட்டுள்ளார். மகளிர் இசைக்கருவிகளை மீட்டுவதில் சிறந்து விளங்கியுள்ளனர்.

## வாணிகம்

உழவுத் தொழிலிலும் பிறவகைத் தொழில்களிலும் சிறப்புற்று இருந்ததுடன் வாணிபத்திலும் சிறந்து விளங்கியுள்ளனர். நாட்டில் உள்நாட்டு வாணிபமும், வெளிநாட்டு வாணிபமும் நடைபெற்றுள்ளன. வெளிநாட்டு வாணிபம் கடல் வழியாக நடைபெற்றுள்ளது. பொருள் ஈட்டுவதற்காகக் கடல் கடந்து சென்றுள்ளனர். கடிதங்கள், கடிதங்களை

முத்திரையிட்டு விடுத்தல், ஆவணங்கள், ஆவணக் களரிகள் முதலியனவும் இருந்துள்ளன. கரும்பு ஆலைகள் இருந்துள்ளன. பண்டமாற்று முறை மிகுந்துள்ளது. பொற்காசுகளும் வாணிபத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## கடவுள் கொள்கை

கடவுள் என்ற சொல்லிற்குக் 'கடந்தது' என்னும் பொருள். நாகரீக வாழ்வில் திளைத்தவர்களாய் இருந்த பழந்தமிழர் யாவற்றையும் கடந்த ஒரு ஆற்றலே கடவுள் என உணர்ந்திருந்தனர். எனவே 'கடவுள்' என்னும் சொல் பழந்தமிழரின் மெய்யுணர்வுக் கொள்கையை வெளிப்படுத்தி நிற்கின்றது. பின்னர் கடவுளைத் திணைகள் தோறும் குறிஞ்சி - சேயோன், முல்லை - மாயோன், மருதம் - வேந்தன், நெய்தல் - வண்ணன் என்று அழைத்துள்ளனர். எனினும் எல்லாப் பெயர்களும் ஒரே ஒப்பற்ற தனிப்பெரும் பொருளைக் குறித்தன. ஆனால், பிற்கால உரையாசிரியர்கள் வடமொழி நூல் கற்றறிந்ததன் பயனாய் சேயோன் - சுப்ரமணியர், மாயோன் - திருமால், வேந்தன் - இந்திரன், வண்ணன் - வருணன் (மழைக் கடவுள்) என்று கூறியுள்ளமை தவறுடையதாகும். பழந்தமிழர்கள் போரில் இறந்தோர்க்கு நடுகல் இட்டு வழிபட்டுள்ளனர். அதில் அவர்களுடைய பெயரும் பீடும் எழுதி வைத்து அதனைத் தொழுது வணங்கி வேண்டியுள்ளனர்.

## தொகுப்புரை

பழந்தமிழர், கால்டுவெல் கருதுவது போல ஆரியர் வருகைக்கு முன்னர் நாகரீக வாழ்வுக்கு வேண்டிய இன்றியமையாச் சிறப்புகள் மட்டும் பெற்றிருந்தனர் என்று கருதுவது தவறாகும். பதிலாக உயர்ந்த நாகரீக வாழ்வையே பெற்றிருந்தனர் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

இன்று இந்திய நாகரீகம் என்று அழைக்கப்படுவதில் பெரும்பகுதி பழந்தமிழ் நாகரீகம் ஆகும். பழந்தமிழர்களின் சிறந்த வாழ்க்கை முறையை பழந்தமிழும் அதன் இலக்கியங்களும் அறிவிக்கின்றன. இவ்வுண்மையை எவராலும் மறுக்கவும், மறைக்கவும் இயலாது.

இலக்குவனார், ஆய்வு அடிப்படையில் பழந்தமிழர்கள் உயர்ந்த வாழ்வியல் பண்பாட்டை உருவாக்கியவர்கள், அதனைப் பின்பற்றி வாழ்ந்தவர்கள் என்று கூறியுள்ள தன்மை போற்றிப் பாராட்டுதலுக்கு உரியதாகும்.

# திருக்குறள் பொன் போன்றது

## ஆறுவிரல் ஐம்பொறி

வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூ உம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. குறள்-931

அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருத
உட்பகை உற்ற குடி. குறள்-888

இவ்விரு குறட்பாக்களுக்கும் இடையே ஓர் ஒற்றுமையுள்ளது. இவ்விரு குறட்பாக்களிலும் பொன் என்ற சொல் அமைந்துள்ளதைக் காணுக. 'பொன்' என்னும் இவ்விரண்டு சொற்களும் இக்குறட்பாக்களில் பொன்னையே குறிக்கவில்லை. மாறாக இரும்பைக் குறிக்கிறது. பொன் என்ற சொல்லுக்கு இரும்பு என்ற பொருளும் உண்டு.

முதற் குறட்பாவிலுள்ள 'தூண்டிற் பொன்' என்ற தொடர் தூண்டில் இரும்பைக் குறிக்கிறது. இத்தூண்டில் முள், இரும்புக் கம்பியைக் கேள்விக் குறி போல் வளைத்து ஒரு முனையைக் கூர்மையாக்கிச் செய்யப்படுகிறது. இத்தூண்டில் முள்ளில் மண்புழுவை நீள் வகையில் சொருகுவர். மீன் இவ்விரும்புக் கம்பியிலுள்ள மண்புழுவைக் கவ்வும். மீனின் வாய் வளைந்த இரும்புக் கம்பியில் மாட்டிக் கொள்ளும்.

இத்தூண்டில் முள்ளை இரும்பைப் பயன்படுத்தியே செய்வர். பொன்னால் தூண்டில் முள் செய்பவர்கள் எவரும் இலர். எனவே 'தூண்டில் பொன்' என்பது 'தூண்டில் இரும்பையே குறிக்கும். இரண்டாவது குறட்பாவில் 'உட்பகை உற்ற குடி மிகையாகத் தேயும்' என்பதே திருவள்ளுவர் கூற விழைந்த பொருள்.

பொன் விலையுயர்ந்த பொருள். இதனை பொற்கொல்லர் மிகையாகத் தேய்ப்பதில்லை. அளவோடு தேய்ப்பர். இரும்பு விலை குறைந்த பொருள். இதனை கருமார் மிகையாகத் தேய்ப்பதற்கு வாய்ப்புண்டு. இவ்விரு உவமைகளுள் திருவள்ளுவர் விழைந்த பொருளுக்கு 'அரம் பொருத இரும்பு போலத் தேயும்' என்ற உவமையே சாலப் பொருந்துகிறது. மிகையாகத் தேயும் உட்பகைக்கு மிகையாகத் தேய்க்கப்படும் இரும்பைத் திருவள்ளுவர் உவமையாக்கியதே ஏற்றதாகும்.

பொன்னை இரும்பெனக் கூறுவது இவ்விரு குறட்பாக்கள் மட்டுமே.

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. குறள்-155

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. குறள்-267

இவ்விரு குறட்பாக்களும் பொன்னைப் பொன்னெனக் கூறுபவை. பொன்னைப் பொன்னெனக் கூறும் குறட்பாக்கள் திருக்குறளில் இவ்விரண்டு மட்டுமே உள்ளன. ஒரு சொல்லுக்கு இரண்டு பொருட்கள் இருப்பின் அவ்விரண்டு பொருட்களையும் பயன்படுத்துவதில் திருவள்ளுவர் வல்லவர் என்பதை இதன்வழி அறியலாம்.

'நீர் என்பது பல பொருள் குறித்த ஒரு சொல்லாகும். நீர் என்ற சொல்லுக்கு கடல், இயல்பு, குணம், அறிவு, தண்ணீர், கண்ணீர், நீங்கள், தன்மை எனப் பல பொருள்கள் உண்டு. திருவள்ளுவர் ஒவ்வொரு பொருளுக்கும் சில குறட்பாக்களை அமைத்துள்ளார். ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு குறட்பாவை குறள் எண்ணுடன் காண்போம்.

| | |
|---|---|
| விரிநீர் வியனுலகத்து - 13 (கடல்) | நன்னீரை வாழி - 1111 (இயல்பு) |
| நெடுநீர் மறவி - 605 (குணம்) | நிரைநீர நீரவர் - 782 (அறிவு) |
| நீர்இன்று அமையாது - 20 (தண்ணீர்) | புன்கணீர் பூசல் - 71 (கண்ணீர்) |
| பிறர்க்குநீர் இந்நீரர் - 1319 (நீங்கள்) | ஆகுல நீர பிற - 34 (தன்மை) |

ஒரு சொல்லுக்குப் பல பொருட்கள் இருப்பினும் அப்பொருட்களை யெல்லாம் தமது குறட்பாக்களில் அமைத்துக் காண்பிப்பது திருவள்ளுவரின் வழக்கம். இதனால் திருக்குறள் படிப்போரின் சொற்பெருக்கத்திறனும் சொல்லாட்சித் திறனும் வளரும் என்பது அவரின் நோக்கம்.

## வாசகர் வாசகம் ①

## செந்தமிழைப் போற்று

விளைமற்றும் மறுபிறப்புக் கோட்பாட் டோடு
விரித்துரைத்தார் குறள்மாண்பை இளசை யார்தான்
இணையில்லா நெடுநல்வா டைச்சிறப்பும்
இளங்கோகா னல்வரியின் விளைவும் வாழ்த்தும்
மனையறம் சொல் குறள்நெறிகள் கனிமலர்கள்
மரபார்ந்தத் தமிழர்வாழ் வியல்முறைகள்
துனைச்சொல்லி அன்னியூர் தலத்தின் பேறும்
தவழவிட்ட செந்தமிழாம் இதழைப் போற்று!

அன்புள்ள,
**பாவலர் அறிவரசன்**, திருலோக்கி

# ஆசாரக்கோவை, இலக்கிய இலக்கண நயங்கள்

பா. மோகன்,
சமூகரங்கபுரம்.
திருநெல்வேலி

இலக்கினை இயம்பும் நூல்களே இலக்கியமெனப்படுகின்றன. தொல்காப்பியத்திற்கு முன்பே வளமான இலக்கியங்கள் இருந்தன என்றாலும் தற்போது அவை எதுவும் கிடைக்கவில்லை. கிடைத்துள்ள இலக்கியங்களுள் பழமையானவை பத்துப் பாட்டும், எட்டுத் தொகையுமாகிய சங்க இலக்கியங்கள். இவற்றின் காலம் கி.பி. முதல் நூற்றாண்டிற்கு முன் என்பது ஆய்வாளர்களின் கருத்து. ஏறக்குறைய அதே காலத்தில் தோன்றியதும் நீதி இலக்கியங்களுக்கு முன்னோடியுமாகத் தோன்றிய-தாக ஆசாரக்கோவை விளங்குகிறது. இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

கலித்தொகையும், பரிபாடலும் பாடல் வகையால் பெயர் பெற்றுள்ளன. ஏனைய மேற்கணக்கு நூல்கள் ஆசிரியப்பா நடையின. கீழ்க்கணக்கு நூல்கள் வெண்பா நடையின. இவ்வேறுபாடுகள் காலந்தோறும் ஏற்பட்ட "பா"வின் இலக்கண வளர்ச்சியைக் காட்டுகின்றன. பக்தி இலக்கிய காலத்தில் விருத்தமும், சிற்றிலக்கிய காலத்தில் கண்ணி, சிந்து வகைகளும் வளம் பெற்றன.

மிகுந்த சட்ட திட்ட வரையறைகட்கு உட்பட்டு இலக்கண வரம்பிற்கு யாக்கப்படுவன வெண்பாக்களாகும். சட்ட நெறிகளைக் கூறுகின்ற நூல்களில் இலக்கண வரம்பு மிகுந்த பாடல்களைத் தந்தப் புலவர்களின் புலமையும் மொழியார்வமும் ஓர்ந்து உணரத்தக்கன. தமிழில் தொல்காப்பியத்திற்கு முன்புள்ள எண்ணற்ற இலக்கியங்கள் தற்போது கிடைத்தது என்றாலும் தொல்காப்பியத் தோற்றத்திற்கு அவையே காரணமாய் இருந்திருக்கும் என்பதைத் தொல்காப்பியம் வாயிலாகவே அறியமுடிகிறது.

ஆசிரியர் பெருவாயில் முள்ளியார், வெண்பா நடையிலேயே நூறு பாடல்களையும் இயற்றியுள்ளார். இவற்றில் குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, அளவடி வெண்பா, பஃறொடை வெண்பா என அளவால் வேறுபட்ட வெண்பாக்களும், இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா

என இசையால் வேறுபட்ட வெண்பாக்களும் அடங்கும். நூற்றில் ஒன்றுமட்டுமே சவலையாயிற்று. இது அவர் தெரிந்தே இயற்றியதா, அறியாமல் ஏற்பட்டப் பிழையா என்பது அறியுமாறு இல்லை. வெண்பாவின் இலக்கணத்தை பிறழ்ந்தும் இலக்கணமின்றியும் பின்னர் வந்தவர்கள் கவிதை இயற்றுதற்குத் தோற்றுவாய் செய்தார் என்றுக் கொள்ளவே பெரிதும் இடமுண்டு.

வெண்பாவில் ஒழுக்கப் பண்புகளை உரைப்பதானால் சொற் சிக்கனம் மிகவும் முக்கியம். உணர்ச்சி, ஒலிநயம், உவமை, கற்பனை என்றவாறு பல்வேறு உத்திகளைக் கையாண்டு ஓர் இலக்கியத்தின் நயங்களை உணர்ந்து கொள்ளலாம். பொதுவான அறிவுரைகளைக் கூற வேண்டிய நோக்கில் எழுதப்பட்ட இந்த நூலில் அதைச் செய், இதைச் செய்யாதே என்று எவ்விடத்தும் உத்தரவுப் பிறப்பித்துக் கூறப்படவில்லை. ஒரு கற்பனை வழிகாட்டியை மனத்தில் வைத்து, அவர் மிகச் சான்றாண்மை உடையவராய் இருப்பின் எதைச் செய்வார் என்றும், எதைச் செய்யார் என்றும் கூறுவதாக நூல் முழுமையும் அமைந்துள்ளது. இதை வேறு எந்த நூலிலும் காண இயலாது. படும், விடும், ஆகும், வேண்டும், வேண்டாம், கூடாது முதலிய துணை வினைகளுள் நேர்மறையான பொருளில் படும், விடும் என்பன ஆங்காங்கே எடுத்தாளப் பட்டுள்ளன. இந்தத் துணை வினைகள் கூட எதிர்மறையாகப் பயன்படுத்தப் படவில்லை. ஆகாது, கூடாது, வேண்டாம் என்பன போன்ற எதிர்மறைத் துணை வினைகளும் நூலில் எங்குமில்லை என்பது அறியத்தக்கது.

வியங்கோள் வினைமுற்றுகளின் ஆதிக்கம் நூலில் மிகுந்துள்ளன. இவையும் வாழ்த்துதல்,வைதல் என்றப் பொருளில் எங்கும் இடம் பெற வில்லை. வேண்டல், விதித்தல் என்றப் பொருளில் மட்டுமே வியங்கோள் வினைமுற்றுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மக்களின் வழக்காறுகளை நன்கு அறிந்த நூலாசிரியர் இலக்கணத்தில் உள்ள தகுதியான வழக்குகளையும், ஆங்காங்கே கையாண்டுள்ளார். தகுதி வழக்காவது, (1) இடக்கரடக்கல், (2) மங்கலம், (3) குழூஉக் குறி என்பன. பாடல் 35இல் மலம் சிறுநீர் கழித்த பின்னர் சுத்தம் செய்து கொள்வதை, பூசுதல் என்ற சொல்லால் ஆண்டுள்ளார். ஆண் பெண் கூடலை, இணை விழைச்சு, உடன் உறவு என்றச் சொற்களால் எடுத்துரைமையும் இடக்கரடக்கலே.

நரகத்தை நிறையம் என்பதும், சுடுகாட்டைச் சுடலை என்பதும் மங்கல வழக்கு கருதியே. குழூஉக் குறி என்பது ஒரு கூட்டத்திற்கு மட்டுமேப் புரியும் சொல் வழக்காகும். பொதுவாகப் புலவர்கள் இந்தச் சொற்களைக் கவிதை புனைதற்கு ஏற்பதில்லை என்றாலும், அரிதாகச் சில இடங்களில் பயன்படுத்துகின்றனர். நிழல் மிதித்து நில்லார் என்றத் தொடரில் நிழல் மிதித்தல் என்பது பகைவர்களை உருவாக்கிக் கொள்ளுதல் என்றப் பொருளில் குழூஉக்குறியாக ஒற்றர்களுக்கே உள்ள மொழிநடையில் கூறப்பட்டுள்ளது. எறும்பு, தூக்கணாங்குருவி, காக்கை முதலிய உயிரினங்கள் போன்று உழைத்து, வீடுகட்டி, பண்பாட்டுடன் வாழ வேண்டும் என்பதைக் கூறுமிடத்து எளிய உவமைச் சுட்டி விளக்குகிறார். (எறும்பு தூக்கணம் புள் காக்கை - பாடல் 96)

தமிழில் உள்ள இயல், இசை, நாடகங்களுக்கு அகத்தியம் இலக்கணம் சொல்லியது. தொல்காப்பியத்தில் இயற்றமிழ் இலக்கணம் மட்டுமே கூறப்பட்டுள்ளது. தொல்காப்பிய உவமயியலே தண்டியலங்காரம், மாறனலங்காரம் முதலான அணியிலக்கண நூல்களாகத் தோன்றக் காரணமாகின்றன. தொல் காப்பியச் செய்யுளியல் அவிநயம், காக்கைப் பாடினியம், யாப்பருங்கலக்காரிகை முதலிய நூல்களாகவும் விரிவடைந்துள்ளன. அவ்வாறே பாட்டியல் நூல்களும் தனி இலக்கணப் பிரிவாயின.

தொல்காப்பியம் புறத்திணை இயலில் வாகைத்திணையும் ஒன்று. இத்திணை பாலைத்திணைக்குப் புறம்பானது. பாலை என்பது பிறவற்றிலிருந்து பிரிந்தது. மேம்பட்டது. வாகைத்திணை, ஒவ்வொரு இனத்திலும் உள்ள மக்கள் தங்களின் செயல்களால் மற்றவரிடமிருந்து, மேம்பட்டு நிற்பதை விளக்குகிறது. தொல்காப்பியத்தில் பொருளதிகாரம் புறத்திணையில் வாகைத் திணையில் அறநெறியை உரைக்கும் கருத்துகள் உள்ளன. அவை :

"எட்டுவகை முதலிய அவையத்தானும்,
கட்டுஅமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்,
இடையில் வண்புகழ்க் கொடைமை யானும்,
பிழைத்தோர்த் தாங்கும் காவலானும்
பொருளொடு புணர்ந்த பக்கத்தானும்
அருளொடு புணர்ந்த அகற்சியானும்
காமம் நீத்த பாலினானும் என்று
இருபாற்பட்ட ஒன்பதின் துறைத்தே. (தொல்-1022)

ஆசாரக்கோவையில் உள்ள பாடல்களில் பெரும்பாலானவை வாகைத் திணைக்குச் சான்றாகக் கொள்ளத்தக்கன. குறிப்பிட்ட, சில பண்புகளை கூறுமிடத்து, பெரியவர்கள் இதை செய்யார் என அவர்களை மேம்படுத்துவதாக, நூலில் மிகுதியான பாடல்கள் உள்ளன. தொல்காப்பிய இலக்கணப்படியே பல்வேறு சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன. நீதி இலக்கியங்கள் தோன்றுவதற்கும் தொல்காப்பிய வாகைத்திணையே தோற்றுவாய் செய்துள்ளது. அதன்படி தமிழில் எழுந்த முதல் நீதி இலக்கியமாக ஆசாரக் கோவையைக் கொள்ளலாம்.

முற்காலத்தில் தமிழிலும் ஆசாரம், விவகாரம், பிராயச்சித்தம் என்பனவற்றிற்கும் வழி காட்டும் நூல்கள் இருந்திருக்கக்கூடும். இதில் உள்ளனவும் அறம், அறிவியல், பண்பாடு, ஆன்மீகம் என பகுக்கப்பட வேண்டியதாய் உள்ளன. அந்த அறமும் அறம், பொருள், இன்பம் என விரிகிறது. இவ்வாறு தொல்காப்பியத்திலிருந்து பல இலக்கிய வகைகள் காலந்தோறும் தோன்றியன. தொல்காப்பிய வாகைத் திணையிலிருந்து தோன்றிய ஆசாரக்கோவை பல நீதி நூல்கள் பல்கிப் பெருகி வளர்ந்து தழைக்க, காரணமாக இருந்துள்ளது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள ஒரு பண்பு, மற்ற அற நீதி நூல்களில் பல பாடல்களாகவும், சில அதிகாரங்களாகவும் இருப்பது ஒன்றே. மேற்கூறிய கருத்தை உறுதிப் படுத்துமாறு உள்ளது.

'ஆற்றொழுக் கரிமா நோக்கம், தவளைப் பாய்த்துப் பருந்தின் வீழ் அன்ன சூத்திரநிலை' (நன்னூல் பொதுப் பாயிரம் சூத்திர நிலை -19) என்ற நன்னூல் சூத்திர முறைக்கு உட்பட்டே ஆசாரக்கோவையின் சில பாடல்கள் உள்ளன. அவை பின்வருமாறு.

**ஆற்றொழுக்கு**

"நன்றியறிதல்" ---(பாடல் :1)
"வால்முறையான் வந்த"---(பாடல் 61)
"கால்வாய்த் தொழுது"---(பாடல் 62)
"துன்பத்துள் துன்புற்று"---(பாடல் 79)
"உதவிப்பயன் உரையார்" ---(பாடல் 88)

**அரிமாநோக்கு**

"பிறர் மனை,கள் களவு"---(பாடல் 37)
"பொய் குறளை"---(பாடல் 38)
"படிறும் பயனிலவும்" ---(பாடல் 52)

**பருந்து வீழ்**

"குரவர் உரையிகந்து" ---(பாடல் 17)

"கண் எச்சில் கண்ஊட்டார்" ---(பாடல் 41)

"பாழ் மனையும் தேவகுலனும்" ---(பாடல் 57)

இவற்றின் வாயிலாக நன்னூல் சூத்திர முறைக்கு உட்பட்டு ஆசாரக்-கோவை நீதி இலக்கண நூலாக யாக்கப்பட்டுள்ளது புலனாகிறது.

கோவை என்ற சொல்லுக்கு மணிச்சரம் மேகலை என்று பொருள் தருகிறது அபிதான சிந்தாமணி. பல பொருட்களைத் தொகுப்பது கோர்வை எனவும், கோவை எனவும் கூறப்படுகிறது. கோவை இலக்கியங்கள் காலத்தால் பிற்பட்டன. மாணிக்க வாசகரின் திருக்கோவையார், ஔவையாரின் அசதிக் கோவை, இவ்விரண்டைக் காட்டிலும் ஆசாரக்-கோவை காலத்தால் முற்பட்டது. கோவை நூல்கள் காலந்தோறும் படைக்கப்பட்டமை இதிலிருந்து புலனாகிறது.

திருமுருகாற்றுப்படை முதலான நாற்பது நூல்களின் தொகுப்பான பதினோராம் திருமுறையை பிரபந்தக் கோவை எனும் பெயரிலும் அழைக்கின்றனர். கோவை என்ற தனி நூல் அகப்பொருள் பற்றியதாகும். அதாவது அகப் பொருள் சார்ந்த நானூறு கட்டளை கலித்துறைச் செய்யுளிலான நூலே கோவையாகும். மணி வாசகர் தெய்வத்தின் மீது பாடிய கோவையும் பல்வேறு துறையிலான அகப்பொருள் பற்றிய நூலே. இறைவனைத் தலைவனாகவும், உயிர்களைத் தலைவியாகவும் பாவித்துப் பாடிய நூலே திருக் கோவையார். இதில் பல்வேறு துறைகளிலும் பாடல்கள் உள்ளன. பிற்கால சேதுபதிகளின் காலத்தில் இயற்றப்பட்ட ஒருதுறைக் கோவையில் ஒரே துறையிலான நானூறு பாடல்கள் கட்டளைக் கலித்துறையில் பாடப்பட்டுள்ளன. கட்டளைக் கலித்துறை என்ற 'பா' விற்கு யாப்பருங்கலக் காரிகையில் இலக்கணம் எழுதப் படவில்லை. ஆனால் அந்நூல் முழுமையும் நாற்பத்து மூன்று கட்டளைக் கலித்துறையால் எழுதப்பட்டிருந்தன. அதிலிருந்து அதன் இலக்கணம் ஓர்ந்து உணரப்படுகிறது. கட்டளைக் கலித்துறை 'பா' வகை நேரசையில் தொடங்கினால் அறுபத்து நான்கு எழுத்துக்களுடனும், நிறையசையில், தொடங்குமானால் அறுபத்து எட்டு எழுத்துக்களுடனும் பாடப்படுவதாகும். பாடல் புனைவதில் பழந்தமிழர்கள் புலமை மிக்கவர்கள் என்பதைப் பிற கோவை மூலம் அறியலாம். அகநானூற்றில் இறுதி நூறு பாடல்களுக்கு

நித்திலக் கோவை எனப் பெயரிட்டுள்ளனர். இதற்கு முத்துக்களாலான கோவை என்றும் பெயர். இத்தகைய இடங்களில் மாலை (ஆரம்) என்ற பொருளில் கோவை என்ற சொல் கையாளப்பட்டுள்ளது.

கோவைப் பழம் என்றொரு பழமுண்டு தன் நிறத்தாலும் சுவையாலும் பறவைகளையும் மிருகங்களையும் ஈர்க்கும் தன்மையுடையது. பண்பாலும், மேன்மையாலும் கவரும் தன்மையிலான ஒழுக்கங்களை ஆசாரக் கோவை என்பதாக உவமையாகு பெயராகவும் கொள்ள இடமுண்டு. கோவை என்ற சொல் பழத்திற்கு ஆகி, பழம் என்பது எளிமைக்கு ஆகி, எளிய ஆசாரங்கள் என்றப் பொருள் கொண்டால், 'இருமடியாகு' பெயராகிறது. பல்வேறு கோணங்களில் எப்படிப் பொருள் கொண்டாலும் நூலுக்கு மேன்மை தருவதாகவே பெயர் அமைந்துள்ளமை ஆராயத்தக்கது. கோவைக் கொடியின் காய்கள் மருத்துவக் குணமுடையன. இவை பெரும்பாலும் இலை மறை காயாகவே காணப்படுகின்றன. இலைமறைக் காயாக உணர்த்தப்படும் பண்புகளும் அதிக முக்கியம் வாய்ந்தவை என்பதை உணர்த்துவதாயும் இப்பெயர் அமைந்துள்ளமை அறியத்தக்கது.

ஆசிரியன் என்ற சொல்லுக்கு ஆசான் என்று பொருள். ஆசானால் போதிக்கப்படுவனயாவும் ஆசாரங்கள் என்று கொள்ளலாம். அவ்வகையில் அறநூல்கள் நல்லாசானுக்கு இணையாகவே கொள்ளத்தக்கன. பண்பு, கல்வி, ஒழுக்கம், அறிவு, நடத்தை, நாகரீகம் என பல பொருளில் இச்சொல் கையாளப்படுகிறது. தமிழில் இந்த சொல் இல்லாததாகத் தோன்றக்கூடும். இதற்கு ஏற்ற பொருத்தமானத் தமிழ் சொல் ஒழுக்கம் என்பதாகும். ஒழுக்கம் என்ற சொல் மேற்சொன்ன விரிவான பொருள் தராது. ஆசாரக்கோவையில் ஆசாரம் என்ற சொல்லை எடுத்துவிட்டு எந்தத் தமிழ் சொல்லை இட்டு நிரப்பினாலும் விரிவான பொருள் தராது என்பதனால் அச்சொல்லை அங்ஙனமே ஏற்றுக் கொண்டுள்ளார் இந்நூலாசிரியர். இதுகாறும் உரைக்கப்பட்டுள்ள செய்திகள் வாயிலாக ஆசாரக்கோவை இலக்கியத்தின் இலக்கணக் கட்டமைப்பினை இனம் காணமுடிகிறது.

*பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை*
*மறத்தல் அதனினும் நன்று.* குறள் : 152

# நூலகம்

கவிவேந்தர் **கா. வேழவேந்தன்**

நூலகம்தான் நான் வணங்கும் கோயில்! உள்ள
நூல்கள்தாம் அறிவுவரம் அளிக்கும் தேவர்!
நூலகம்தான் உயர்ஏற்றும் ஏணி! நல்ல
நூல்கள்தாம் ஆசான்கள் வாழ்நாள் எல்லாம்!
நூலகம்தான் மனஇருட்டை விரட்டும் தீபம்!
நூல்கள்தாம் அமைதிதரும் மாமருந்து!
நூலகம்தான் முக்காலம் காட்டும் ஆடி!
நூல்கள்தாம் கூர்மூளைச் சாணைக் கற்கள்!

நூலகத்தில் குடியிருந்த 'காஞ்சி அண்ணன்'
நுண்ணறிவால் பார்வியக்கும் 'அறிஞர்' ஆனார்!
நூலகமே சொர்க்கமென வாழ்ந்த மார்க்கம்
நுட்பமுடன் 'மூலதன வேதம்' தந்தார்!
நூலகம்தான் இன்பபுரி என்ற 'லிங்கன்'
நுவல்சரிதப் புகழ்முகட்டில் ஏறி நின்றார்!
நூல்ஆழி தோய்ந்தெழுந்த 'அம்பேத்கர்' தாம்
நொடித்தஇனம் விழித்தெழவே 'விடியல்' ஆனார்!

மண்ணுண்ட கண்ணகியைப் பாரி ஓரி
மன்னர்களைச் சந்திக்க விருப்பம் உண்டா?
எண்ணரிய கற்பனையால் கவிஞர் வைக்கும்
எழில்விருந்தை உண்ணுதற்கே ஆவல் தானா?
கண்ணெட்டா விண்வெளியைக் கடற்பெண் காட்டும்
காட்சியெலாம் காண்பதற்கும் வேட்கை உண்டா?
அண்மையுள்ள நூலகத்தில் அடிவை யுங்கள்;
அளப்பரிய இன்பத்தில் திளைத்தி டுங்கள்

# புறநானூற்றில் மறக்கொடை

**ஜெ. ஜெனகம்**
முனைவர்ப்பட்ட ஆய்வாளர்
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*

சங்க காலத்தின் வரலாற்றுப் பெட்டகமாகவும் வாழ்வியல் களஞ்சியமாகவும் போற்றிப் பாதுகாக்கப்படுவது புறநானூறு ஆகும். மனித வரலாற்றை அறிய மொழி, கல்வெட்டு, தொல்பொருள் ஆராய்ச்சி என்று ஒவ்வொரு துறையும் தமது தேவையை நிறைவு செய்கின்ற நேரத்தில் சங்கச் சமூகத்தின் வாழ்வாதாரங்களைப் பிரதிபலிக்கும் இலக்கியச் சான்றாக புறநானூறு மிளிர்கின்றது என்பதில் மாற்று கருத்து இல்லை.

கொடை என்பது ஒருவர் கொடுக்க மற்றொருவர் பெற்றுக் கொள்ளும் நிலைப்பாட்டைக் கூறுவதாகும். கொடுக்க ஒருவர் இருப்பாரேயானால் பெற்றுக்கொள்ள மற்றொருவர் இருந்தே ஆகவேண்டும். புறநானூற்றில் கொடுக்கப்படும் கொடைத்தன்மை பல்வேறு நிலைகளில் நிகழ்ந்துள்ளன. தன்னுடைய பொருளைக் கொடையாகக் கொடுத்து, திரைப்பொருளைக் கொடையாகக் கொடுத்தது, போர்வழியாகப் பெறப்பட்ட பொருள்களைக் கொடையாகக் கொடுத்தது மயக்கத்துடன் கொடை கொடுத்தது போன்ற பல்வேறு நிலைகளில் கொடை அளிக்கப்பட்ட செய்திகள் புறநானூற்றில் காணப்படுகின்றன.

தனது வீரத்தின் மூலம் கிடைத்தப் பொருள்களையும் வறியவர்களுக்கு கொடையாகக் கொடுத்த செய்தியையே மறக்கொடை என்றனர். மறக்கொடையைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மறக்கொடை

போரில் எய்தும் வெற்றிகளுக்கு ஒருவன் செய்யும் கொடைச் செயலே காரணம் கொடை நலம் பெறாவிடின் தோல்வி உறுதி என்பது அக்கால நம்பிக்கை. ஆதலால் வீரர்கள் எல்லாம் கொடைஞர்களாகத் திகழ்ந்தனர் எனலாம். நலங்கிள்ளி வாகைசூட வழி கூறும் போது முதுகண்ணன் சாத்தனார், நீ இரப்போர்க்கு ஈக நின் பகைவர் ஈயாராகுக. அப்பொழுதுதான் உனக்கு போரில் வெற்றியும் உன் பகைவர்க்குத் தோல்வியும் கிடைக்கும் என்று கூறினார்.

"வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
அருள வல்லை ஆகுமதி. அருளிலர்
கொடாஅமை வல்லர் ஆகுக.
கெடஅத துப்பின்நின் பகைஎதிர்ந் தோரே" (புறம் - 27)

அறநெறிப்போரில் வெற்றி பெற்றதால்.

வரும்பொருள்களையெல்லாம் வறியார்க்கும் பிறர்க்கும் வழங்கினர். அவ்வாறு மறத்தால் ஈட்டியதை பிறர்க்கு வழங்கியதே மறக்கொடையாகும். வேந்தர்கள், குறுநிலமன்னர்கள் எல்லோரும் மறத்தினால் வந்த பொருள்களை வறியவர்க்கும், பரிசில் மாக்களுக்கு உவந்தளித்த செய்தியை பின்வரும் புறநானூற்று பாடல்கள் மூலமாக அறியலாம்.

மூவேந்தர்க்கும் போரில் துணையாக நின்றதால் கிடைத்தப் பொருள்கள் யாவற்றையும் திருமுடிக்காரி தன் குடியை வாழ்த்தி புகழும் இரவலர்க்குக் கொடையாகக் கொடுத்தான் என்பதை கபிலர்,

"மூவருள், "ஒருவன் துப்பா கியர்" என
ஏத்தினர் தரூஉங்கூழே, நும்குடி
வாழ்த்தினர் வரூஉம் இரவலர் அதுவே" (புறம். 122 - 5-7)

புலப்படுத்தியுள்ளார்.

உழுது வரும் மாடு நெல்லைப் பிறர்க்கு அளித்துத் தான் வைக்கோலைத் தின்பது போலப் போரின் மூலம் பெற்ற பொருள்களைப் பிறர்க்கு வழங்கி எஞ்சியதை அமுதமாக எண்ணி உண்டு மகிழும் தன்மையுடையவன் மலையமான் என்று பேரிசாத்தனார் என்ற புலவர் பாடியுள்ளதை பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

"உழுத நோன் பகடு அழி தின்றாங்கு
நல் அமிழ்து ஆக நீ நயந்து உண்ணும் நறவே" (புறம். 125. 7-8)

ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன் என்னும் மறவன் தன்னைப் பாணர் இரந்தபோது அவர்களது உண்ணாத வாடிய வயிற்றைக் காட்டிக் கொல்லனை நோக்கி இவ்வேலைச் செம்மையாக வடித்துக்கொடு என்று ஆணையிட்டான் என்று புலவர் மதுரைக் குமரனார் பாடியுள்ளார்.

"யாம்தன் இரக்குங் காலை, தான்அம்
உண்ணா மருங்குல் காட்டித் தன்ஊர்க்
கருங்கைக் கொல்லனை இரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசின் எனவே" (புறம். 180, 10-13)

வடித்த வேலின் துணையால் தன் வீரங்காட்டிப் பொருள் ஈட்டிப் பாணரைப்

புரந்தான் என்ற தோயன்மாறனின் மறக்கொடையை காட்டுவது இப்பாடலாகும்.

கதிரவன் உள்ள பக்கம் நோக்கும் நெருஞ்சிப்பூவின் இயல்பை உவமையாக்கிக் கொண்பொருங் காணங்கிழான் மார்பை இரவலரின் கையகத்துள்ள மண்கலன் நோக்கும் செய்தியைப் புலப்படுத்துவர்.

"பாழ்ஊர் நெருஞ்சிப் பசலை வான்பூ
ஏந்தரு சுடரின் எதிர்கொண் டாஅங்கு
இலம்படு புலவர் மண்டை விளங்கு புகழ்க்
கொண்பெருங் காணத்துக் கிழவன்
தண்தார் அகலம் நோக்கின் மலர்ந்தே" (குறம். 155, 4-8)

இரவலரின் மண்கலம் புரவலரின் மார்பு நோக்கி மலர்ந்தது என்றதன் குறிப்பு அவன் மார்பாற்றலால் ஈட்டிய பொருளை இரவலர்க்கு வழங்கினான் என்பதை உணர்த்தவே மறக்கொடையின் மாண்பைப் புலவர் நயம்படக் கூறியுள்ளார்.

மற்றொருப் பாடலில் மல்லிகிழான் காரியாதி என்ற மறவன் தான் காட்டிற்கு சென்று வேட்டையாடி கொண்டுவந்த எய்ப்பின்றித் தசையுடன், செவ்விய சோறும் வருவார்க் கெல்லாம் குறைபடாது ஒப்ப வழங்குபவன் ஆதி. இவனது கொடைக் காட்சி பிற வேந்தரைப் பலநாள் பாடிக் காத்திருந்து பெறுகின்ற யானைக் கொடையிலும் சிறந்தாகும் என்பதை,

"பெரும்பெயர் ஆதி பிணங்கரிற் குடநாட்டு
எயினர் தந்த எய்ம்மான் எறிதசைப்
பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் அமலை
வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய
இரும்பனாங் குடையின் மிசையும்
பெரும்புலவர் வைகறைச் சீர்சாலாதே" (புறம். 177, 12-17)

பாடல் மூலம் அறியலாம். மேலும், போர் மூலம் பெற்ற பொருள் மட்டும் இல்லாமல் வேட்டையாடுதல் போன்ற மறச்செயல்களின் மூலம் கிடைக்கும் உணவுகளைக் கூட பிறர்க்குகொடையாக, கொடுத்தான் என்ற செய்தியை ஆவூர் மூலங்கிழார் என்ற புலவர் பாடல் மூலம் அறியமுடிகிறது.

பகைவரது ஏராளமான ஆநிரைகளையும் கைப்பற்றிக் கொண்டு வந்தான் மறவன் ஒருவன். அதனால் அவனுக்கு எந்தப் பயனும் இல்லை. ஏனெனில் அனைத்தையும் பிறர்க்கு அப்படியே வழங்கிவிட்டான். அந்த ஆநிரைகளால் பாலும் கரந்து காணான். தயிர் கடையும் ஒலியும் அவன் வீட்டிலே கேளாது ஏனென்றால் அவன் வறுமையிலேதான் இருக்கின்றான்

என்று ஒரு மறவனின் கொடைச்சிறப்பை பெயர் தெரியாத புலவர் ஒருவர் பாடியுள்ளார்.

"........... ............அவைதாம்
மிகப்பல ஆயினும் என்னாம்? எனைத்தும்
வெண்கோள் தோன்றாக் குழிசியொடு
நாள்உறை மத்தொலி கேளா தோனே?" (புறம் - 257; 10-13)

தனது மறச்செயல்கள் மூலம் கிடைத்தப் பொருட்கள் தனக்கு இல்லையென்றாலும் பிறர்க்கு கொடுத்து மகிழ்ந்த செய்தியை இப்பாடல் மூலம் அறியலாம்.

அவ்வாறே மற்றொரு பாடலில் தம்பியால் நாடு கொள்ளப்பட்டு காடுபற்றியிருந்த குமணவள்ளலைப் பெருந்தலைச் சாத்தனார் புகழ்ந்துபாட அவ்வள்ளல் பரிசிலன் பொருளின்றி வறிதே திரும்பிச் செல்லுதல் "என் நாடு இழந்தாதனினும் நனி இன்னாது" என்றெண்ணி விலைமதிப்புடைய தன் தலையைப் பரிசிலாகத்தர வாள் தந்தனன் பரிசிலுக்கு ஈடாகத் தலைதர வாள் தந்த இந்நிகழ்ச்சி குமணனின் மறக்கொடையைக் காட்டுகின்றது.

"பாடிநின்றனென் ஆக, கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என்
நாடு இழக் ததனினும் நனிஇன் னாதெ
வாள்தந் தனனே தலை எனக்கு ஈயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்" (புறம் - 165)

இம்மறக்கொடை இறைவனுக்கு தன் கண்ணை எடுத்து வைத்த கண்ணப்பனின் மறக்கொடையினை நினைக்கத் தோன்றுகிறது.

பகைவர் நாட்டினை வெல்லுதற்கு முன்னரே தம் வீரத்தில் நம்பிக்கை வைத்து வென்றதாக எண்ணி அதனைப் பரிசிலர்க்கு வழங்கினான். நேய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி என்ற சேர மன்னன் என்று ஊன் பொதி பசுங்குடையார் என்ற புலவரின் பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

"ஆர்எயில் அவர்கட்கு ஆகவும், 'நுமது' எனப்
பாண்கடன் இறுக்கும் வள்ளியோய்!
பூண்கடன், எந்தை! நீ இரவலர் புரவே" (புறம் - 203, 10-12)

இவ்வாறு தனது வீரத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்களாக சங்ககால மன்னர்கள் விளங்கினர்.

## முடிவுரை

புகழுக்குரிய வழிகள் பலவுளவேனும் மறத்தாலும், அறத்தாலும்

வரும் புகழே பண்டு போற்றப்பெற்றன. மறப்புகழ் நிறைந்த மைந்தினோன் (புறம். 290) என்று வீரத்தையும் வண்புகழ் (புறம். 157) என்று கொடையையும் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. வீரமும் கொடையும் சிறந்தவை எனப் போற்றும் சங்க இலக்கியங்கள் வீரத்தைக் கொடைக்கும் பயன்படுத்தி உள்ளமையைத் தெளிவாகக் காட்டுகின்றன. மேலும் அவ்விலக்கியங்கள் காதலை விட கொடை சிறந்தது என்பதைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் காட்டுகின்றன. ஆகவே சங்கப் பாடல்கள் வீரயுகத்தைச் சார்ந்தவை என்பதை விட கொடையுகத்தைச் சார்ந்தவை எனக் கூறுதல் சிறந்ததாகும்.

❖ ❖ ❖

## தமிழே! தாயே! வாழ்க நீடு!

புலவர். **ந. ஞானசேகரன்,** திருலோக்கி.

எழுத்தாகி சொல்லாகி யாப்பென் றாகி
இனிப்பூட்டும் பொருளாகி அணியும் ஏந்தி
பழுத்துதிரும் முதுமையுற்றும் இளமை மாறாப்
பாங்கோடு பிறமொழியை வீழ்த்திச் சான்றோர்
வழுத்துகின்ற தனித்தமிழே! கனியின் சாறே!
வளமையுறு இலக்கியங்கள் உருவில் வாழ்ந்து
செழித்திருக்கும் இயலிசைநாட் டியமாய் நின்று
செம்மொழியாய் இலக்கணத்தோ டிலங்கும்தாயே!

மூத்தவளாய்ப் புலவோர்தம் நெஞ்சில் தோய்ந்து
முன்னவளாய் நன்னெறிகள் தான்பு கட்டி
பூத்திருக்கும் கவிமலருள் கருத்தை வார்த்துப்
பூங்காற்றாய் இதயத்தை வருடி, மேலும்
சீத்தலையின் இளங்கோவின் கம்ப நாட்டார்
செந்நாப்போ தார்குறளாம் வாக்கில் வாழ்ந்தே
கூத்தரசி யாய் ஆடிக் குமரி தொட்டுக்
குளிரிமயம் வரைசென்றே சேரன், சோழன்

தென்மதுரைப் பாண்டி யராம் மூவேந்தர்தம்
திருத்தொண்டால் பெருமையுற ஏற்றிப் போற்றி
அன்புதிர்த்த அரவணைப்பால் வளர்ந்த மாண்பால்
அகிலமெலாம் வலம்வரும்நல் அமிழ்தே! தேனே!
நன்றான இயலிசையாம் நாடகத்தை
நடிப்பென்னும் கலையோடே உலவ விட்டே
தன்முனைப்பால் தனித்துவத்தால் புகழைத் தேக்கித்
தண்டமிழாய் ஒளிசிந்தும் தாயே! வாழ்க!

# வாசகர் வாசகம் ②

மதிப்பிற்சிறந்த செந்தமிழ் ஆசிரியர் பெருந்தகையீர், வணக்கம். வாழ்க வளமுடன். செந்தமிழ் ஆகஸ்டு 2014 உள் அட்டைப்படச் செய்தி, மனோன்மணியம் சுந்தரனாரின் நாட்டு அபிமான வரிகள் மிகு பாடல்களை நினைவூட்டுகிறது. பாரதி : 'வாழிய பாரத மணித்திருநாடு!' அறக்கட்டளைப் பயனை நன்குணர்த்துகிறது. வளாகச் செய்தி. இதழ்மணம் மூன்றாம் பத்தி. 'திருமலை---' கட்டுரையை முதலில் படிக்க ஆர்வமூட்டியது; அரிய செய்திகள்; சிறந்த படைப்பு; மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தார், செந்தமிழ் இதழாளர், செந்தமிழ்க் கல்லூரியினர், கட்டுரையாளர் முதலிய பலரும் மிகுந்த பாராட்டுதலுக்கு உரியோர்! உரப்பனூர்ச் செப்பேட்டிலுள்ள 'தங்கப்பூவு', சங்க இலக்கியம் குறிப்பிடும் 'பொற்பூக்கொடை 360 ஆண்டின் முன்னும் தொடர்ந்ததற்குச் சான்றாம்!

குறிஞ்சிப் பூத்தால், அத்தனிப் பூந்தேனை மட்டுமே கூட்டில் இழைக்கும் தேனீ போல, 'குறுந்தொகை' மேற்கோள்களால், தொல். 'அச்சமும் நாணும் மடனும்---' நன்கு விளங்கச் செய்துள்ளார், முதல்கட்டுரையாளர். தோழியின் திறனை உணர்த்தும் 'வேம்பின் பைங்காய்---' மேற்கோள் அருமை! அணிநலன் என்னும் முத்துப்பல்லக்கில், பொருள்நயம் அமர்ந்து பயணிக்கிறது! பாராட்டுக்கள்!

பாவேந்தரின் இளைஞர் இலக்கியம் பற்றிய கட்டுரை, தோரணவாயில் தொடங்கி, 8 குறுந்தலைப்புகளில், 134 பாடல்களின் போக்கை, அகச்சான்றுகளுடன் அலசுகிறது; புதிய தமிழ்ச் சொல்லாக்கங்கள், மனக்கேணியில் தூய நன்னீர் சொரியும் ஊற்றுகளின் நிகரே!

மணிமேகலையில் சமயப்பொறை உள்ளதை நிறுவும் கட்டுரை, 12 தலைப்புகளில், தெளிந்த நீரோடை நடையில் அமைந்து, பாராட்டுப் பெறுகிறது; நீலகேசி பா கருத்துக்கரண்; பத்து சமயப்பெயர்கள், நிறைவுரையில் உள்ளது சிறப்பு.

புறம். ஆயும்'---முரசு' கட்டுரையில், போர்க்கருவி 27, முரசுக்குறிப்பு 27 அட்டவணை சிறப்பு; பா/ கருத்து வழங்கும் எண்வரிசை அழகு! பாராட்டுகள்!

மொத்தத்தில்,

"செம்பொன்னின் நேரழகு செந்தமிழ்இ தழ்போல
எம் மருங்கில் வேறுண் டியம்பு!"

இப்படிக்கு,

புலவர் சி. **பாண்டுரங்கன்,** ஆம்பூர்.

# வழிபாட்டு நோக்கில் வைகுண்டரும் வள்ளலாரும்

முனைவர் இ. வீரசக்திவேல்
அரசு மேல்நிலைப்பள்ளி,
மருங்காபுரி.

## முன்னுரை

'வாழ்வீர் தாழ்வு இல்லாமல்', 'தாழக் கிடப்பாரைத் தற்காப்பதே தர்மம்' என்பன போன்ற தத்துவ மொழிகளை மொழிந்த வைகுண்ட சுவாமிகளின் இயற்பெயர் 'முடிசூடும் பெருமாள்' ஆகும். இவர் 19.04.1809-ஆம் ஆண்டு அன்றைய காலகட்டத்தில் தென்திருவிதாங்கூர் பகுதிக்கு உட்பட்டிருந்த தாமரைக்குளம் - சாஸ்தான் குட்டிவிளை கிராமத்தில் பிறந்தவர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் ஏற்பட்ட சாதி-சமயப் போராட்டங்கள் நாட்டையே உலுக்கி எடுத்தன. தென் தமிழகத்தில் தலைதூக்கி இருந்த சாதிய வெறித்தனத்திற்கு அளவே இல்லாமல் இருந்தது. இத்தகு சூழலில், உயர் சாதியினரின் அச்சுறுத்தலுக்கு இரையாக 'முடிசூடும் பெருமாள்' என்ற இயற்பெயர் 'முத்துக்குட்டிப் பிள்ளை' என மாறிப் போயிற்று. அதாவது, தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்த குழந்தைகளுக்கு நல்ல பெயர் வைப்பதற்குக் கூட உரிமை இல்லை. இந்த அவலநிலை வைகுண்டருக்கும் நேர்ந்தது. வைகுண்டரின் சீர்திருத்தப் போக்கிற்கு அடிப்படைக் காரணமே அவருடைய 'பெயர் மாற்றம்' என்று சொன்னால் மிகவும் பொருந்தும். ஆனால் பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைய கடலூர் மாவட்டம் மருதூர் கிராமத்தில் தோன்றிய வள்ளலாருக்கு இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படவில்லை. என்றாலும் சாதிய - சமயப் போராட்டங்கள், பூசல்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், மூடநம்பிக்கைகள் இயல்பாகவே அவரைப் பாதித்தன. இப்படிப்பட்ட பின்னணியோடுதான் வைகுண்டரும் வடலூராரும் சமூகத்தில் சீர்திருத்தங்களைச் செய்ய முன்வந்தனர்.

## வழிபாட்டுமுறை

வைகுண்டரும் வள்ளலாரும் தொடக்கத்தில் சராசரி மக்களைப் போலவே வழிபாடு செய்தவர்கள் தான். ஆன்மீக அறிவு பெருகிடப் பெருகிட சாதாரண மக்களின் வழிபாட்டில் இருந்து விலகிச் செல்வதை நாம் உணரமுடிகின்றது. இருவருடைய வழிபாட்டிலும் சிலையுருவம் அகற்றப்பட்டு 'ஒளி' முதன்மைப்படுத்தப்படுகிறது.

**செந்தமிழ் வாசகர்களிடமிருந்து தரமான ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.**

சங்க காலந்தொட்டு, தமிழர்களின் அடையாளமாகவும், பண்பாட்டுக் கருவூலமாகவும் திகழ்ந்து வருகின்ற தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கணங்கள் புலப்படுத்துகின்ற தமிழர் வாழ்வியல், பண்பாட்டியல், மானிடவியல், வரலாற்றியல், அறிவியல் தொழில் நுட்பவியல், கலையியல், சிற்பவியல் முதலான பொருண்மைகளில் ஆய்வுக்கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

கட்டுரைகள் ஆய்வுநோக்கில், தரவுகளின் அடிப்படையில், தெளிவான நடையில் அமைவது எதிர்நோக்கப்படுகிறது.

– ஆசிரியர் –

தொடர்பு முகவரி

ஆசிரியர்
செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை - 1**

RNI Regd. No. 5508/57 November 2014 Post Regd. No. MA/130/2014-2016

Posted at Madurai BPC on 25th of every month


# செந்தமிழ்க் கல்லூரி



## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, 6575615

✦ இளம் இலக்கியம் ✦ இளங்கலை ✦ முதுகலை

✦ இளம்நிலை ஆய்வாளர் ✦ முதுநிலை ஆய்வாளர்

✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி


அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan,** published by **R. ALAGUMALAI** M.A., M.Phil. on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1,** and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor **R. ALAGUMALAI** M.A., M.Phil.